# மருத்துவப் பெயரகராதி

பதிப்பாசிரியர் :

**முனைவர் சு. சௌந்தரபாண்டியன்,**

எம்.ஏ. எம்.ஏ., பி.எட். டிப்.வ. மொ. பிஎச்.டி.

பொதுப்பதிப்பாசிரியர்

**கு. தாமோதரன்,** எம்.ஏ.

அ.கீ.சு.நூலக வெளியீடு எண் : 422
தமிழ் நூல் வெளியீடு எண் 117

# மருத்துவப் பெயரகராதி

பதிப்பாசிரியர் :

**முனைவர் சு. சௌந்தரபாண்டியன்**
எம் ஏ.எம்.ஏ.,பி.எட். டிப்.வ.மொ,பிஎச்.டி
காப்பாட்சியர்
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
சென்னை-5.

பொதுப்பதிப்பாசிரியர்:

**கு.தாமோதரன்** எம்.ஏ.
இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை
சென்னை-113.

அ.கீ.சு.நூலகம்
1999

விலை ரூ. : **40/-**

முதற்பதிப்பு: 1999
வெளியிட்டபடிகள்: 500
அ கீ.சு.நூலகம், சென்னை-5

பதிப்பாசிரியர் :
முனைவர் **சு.சௌந்தரபாண்டியன்**

பொதுப்பதிப்பாசிரியர் :
**கு. தாமோதரன்**

விலை ரூ. **40/-**

---

**அச்சிட்டவர்கள் :** இராயப்பேட்டை எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் உபபொருள் உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவு சங்கம் லிட்.,
26, கோயா அருணகிரி முதல் தெரு, இராயப்பேட்டை
சென்னை - 600 014.

G.O.M.L. PUBLICATIONS No.422
Tamil Publications No.:117

# MARUTTUVAP PEYARAHARATI

EDITED BY :

**DR. S.SOUNDARAPANDIAN**
M.A.M.A.B.Ed. Dip.Skt. Ph.D.
Curator
Government Oriental Manuscripts Library
Chepauk, Chennai-5.

GENERAL EDITOR :

**K.DAMODARAN** M.A.
Director
*Department of Archeaology*
Tharamani
Chennai - 600 113.

G.O.M.L.
1999

Price Rs.40/-

*First Edition 1999*
No. Copies : 500

(C) G.O.M.L., Chennai-5

Edited by :

**DR. S.SOUNDARAPANDIAN**

General Editor :

**K. DAMODARAN**

Price Rs. **40/-**

---

**Printed at :** Royapettah Stationery and Printing and Allied Products
*Producers Indl. Co-op. Society Ltd.*,
26, Koya Arunagiri 1st Street, Royapettah, Chennai - 600 014.

# மருத்துவப் பெயரகராதி

## பதிப்புரை

அ.கீ.சு.நூலகத்தில் பாதுகாக்கப்பெற்று வரும் ஓலைச்சுவடி (ஆர். 8799)யிலிருந்து பதிப்பிக்கப்படும் நூல் இது.

பெயரகராதி என்று மட்டுமே ஓலைச்சுவடியில் தலைப்பு தரப்பட்டுள்ளது; மருத்துவப் பெயர்களைத் தாங்கியுள்ளதால், தெளிவுக்காகப் பதிப்பாசிரியரால் மருத்துவப் பெயரகராதி என்று நூலுக்குத் தலைப்பு இடப்பட்டுள்ளது.

ஓலைச்சுவடியில் மொத்தம் 69 ஓலைகள் உள்ளன.

இந்நூலைத் தொகுத்தவர் யார் என்ற விவரம் ஓலைச்சுவடியில் இல்லை.

ஓலைச்சுவடியின் எழுத்தமைதியைக் கொண்டு, சுவடியின் காலம் கி.பி.19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி அல்லது, கி.பி. 18 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்று கொள்ளக்கிடக்கிறது. நூலின் காலமும் இந்தக்கால கட்டத்தை ஒட்டியே இருத்தல் வேண்டும்.

ஓலைச்சுவடியில் அகரவரிசையில் தொடர்கள் இருந்தாலும், இரண்டாம் எழுத்து மூன்றாம் எழுத்து ஆகியவற்றைப் பொறுத்தவரை, அகரவரிசை நன்கு பின்பற்றப்படவில்லை. அவை இப்பதிப்பில் செப்பனிடப்பட்டுள்ளன.

ரகரத் கீழ்க்கோடு இல்லாதும், ஒற்றெழுத்துகள் புள்ளி பெறாமலும் அமைந்த ஓலைச்சுவடி இது.

எழுத்துப்பிழைகள், பதிப்புப்பணியைச் சிக்கலாக்கி விட்டது!

மருத்துவச் சுவடிகளைப் பதிப்பிப்பதில் பெரும் இடர்ப்பாடு எப்போதும் உண்டு !

'எழுத்துப்பிழை' என்று சொல்லைத் திருத்திவிட்டால், மருத்துவன் சொன்ன மருந்தே மாறிவிடும்!

இத்துன்பம் இந்த ஓலைச் சுவடிப்பதிப்பிலும் மிகுதியாக இருந்தது!

'அரபொடி' என்று ஓலையில் எழுதப்பட்டுள்ளது; இதை அரப்பொடி என்று பதிப்பிப்பதா? அர்பொடி என்று பதிப்பிப்பதா? அர்ப்பொடி என்று அச்சிடுவதா? ஏனைய இரண்டும் ஒருபொருளைக் குறிப்பது போலக் காணப்படாமையால், அரப்பொடி என்று பதிப்பிக்கப்பட்டுள்ளது.

வேர் என்பதற்கு வேற் எனவும், வேல் என்பதற்கு வேள் என்றும், இரசம் என்பதற்கு றசம் என்றும், அரிசி என்பதற்குஅறிசி என்றும், சிறுநாகப்பூ என்பதற்கு சிருனாகப்பூ என்றும், பன்றிப்பால் என்பதற்குப் பண்ணிப்பால் என்றும், அவரை என்பதற்கு அவறை எனவும், கருங்குரங்கு என்பதற்குச் கருங்குறங்கு என்றும்,மாமரம் என்பதற்கு மாமறம் என்றும் ஓலைச் சுவடியில் பயின்றுள்ளதைத் திருத்துவதில் அவ்வளவு துன்பம் ஏற்படவில்லை.

இதுபோன்ற மருத்துவ அகராதிகள் தமிழ் மொழிக்குத் தொடர்பற்றது போன்ற ஒரு தோற்றம் இருந்து வருகிறது! இது மிகவும் தவறானது.

சொல்லாராய்ச்சி இலக்கண ஆராய்ச்சி போன்ற ஆராய்ச்சிகளுக்கு மருத்துவச் சொற்கள் களம் அமைத்துத் தருகின்றன.

எடுத்துக்காட்டாக, பல மருத்துவச் சொற்கள் தெளிவான சாரியைகளைப் பெற்று வருகின்றன; இவற்றை ஆய்வது நல்லது.

சிறந்த சொல்லாராய்ச்சிகளை மருத்துவச் சொற்கள் வாயிலாக நிகழ்த்த முடியும்; நிகழ்த்த வேண்டும்.

எடுத்துக்காட்டாக அத்தி என்றால் சாம்பல் என்று இந்த நூலில் காணப்படுகிறது.

எனவே அத்தி என்பது ஒரு தமிழ்ச்சொல் என்று நம்மால் கருதவியலுகிறது. இதைத்தான் திரித்து வடமொழியாளர்கள் அஸ்தி என்று கொண்டுவிட்டனர்! இன்று அஸ்தி என்றால்தான் சாம்பலை நாம் பொருள் கொள்கிறோம்; அத்தி என்ற சொல் ஓலையிலேயே தங்கி விட்டது!

பதிப்புப் பெறும் இந்த ஓலைச்சுவடி, ஓர் அரிய ஓலைச்சுவடியாகும்!

பல நுணுக்கமான பொருள்களை இன்னவென்று எளிதில் விளக்குகிறது இச்சுவடி!

அதிமதுரம் என்றால் என்னவோ ஏதோ என நினைக்கிறோம்! அது ஒன்றுமில்லை, குண்டுமணி வேர் தான் என்கிறது நம் சுவடி!

பொதுவாக மருத்துவச் சுவடிகளைப் பதிப்பிக்கும்போது சிலவகையான சிறப்புச் சிக்கல்கள் தோன்றுகின்றன!

ஓர் எடுத்துக்காட்டால் இச்சிக்கலை விளக்கலாம்.

''இரா இருங்கின் வலை முசுமுசுக்கை'' என்று இந்த ஓலைச்சுவடியில் உள்ளது. இதன் பொருள் என்ன? ஒன்றுமில்லை!'' இரு குரங்கின் கை'' என்று வரவேண்டியது. ஏடு எழுதியோர் பிழை காரணமாக,'' இரா இருங்கின் வலை'' என்று எழுதப்பட்டுவிட்டது! இரா என்ன? இருங்கு எது? வலை யாது? என்றெல்லாம் தலையை உடைத்துக் கொண்டு சிறிது நேரம் செலவழித்தபின், இருகை குரங்குதான் அது என்று தீர்மானிக்க வேண்டி உள்ளது!

இந்தச் சுவடியின் நடையானது, பெரும்பாலும், மூன்று வகைகளில் உள்ளன:-

1. ஒரு பொருளின் பொருளை மட்டும் தெரிவிப்பது
2. ஒரு பொருளின் பொருள் இன்ன பொருள் ஆகும் என்று நுவலுவது

3. ஒரு பொருளின் பொருள் இன்னது ஆகும் என்று அறியவும் என்று பேசுவது

கீழ்வரும் மூன்று தொடர்கள் மேல் நடைகளுக்கு எடுத்துக் காட்டுகள் :-

1. இலம் என்பது யானைக் கொம்பு

2. இராடம் என்பது வெங்காயமாகும்

3. இயற்ற என்பது குணமாகும் என்றறியவும்.

பொதுவகைப் பழந்தமிழ்ச் சொற்களஞ்சியமே, மருத்துவ அகராதிகள் என்று கூறலாம்.

பழந்தமிழ்ச்சொற்கள், வேதகாலத்தைவிடப் பழைமை யானவை.

இருக்கு வேதத்தில் பல தமிழ்ச் சொற்கள் உள்ளன.

வேதியர்கள் செய்யும் யாகமுறைகளில் எத்தனையோ தமிழ்ச் சொற்கள் உள்ளன. எடுத்துக்காட்டாக, ஸ்தாலி என்று ஒரு பாண்டத்தை வேதியர் குறிக்கின்றனர்; வடமொழி சிரௌத நூற்களில் ஸ்தாலி என்று குறிப்பது, தாழி என்று தூய தமிழ்ச்சொல்லேயாகும்!

மறைச்சொற்களால் பல மருந்துப் பொருட்களின் பெயர்கள் சித்தமருத்துவத்தில் உள்ளன! 'பரிபாஷை' என்று இது குறிக்கப்படும். பரிபாஷை அகராதி என்றே நூற்கள் அச்சிடப்பட்டுள்ளன.

கௌரி என்ற ஒரு மருந்துப் பொருளை ஈசுவரன் தேவி என்று குறித்துள்ளனர்.

இவ்வாறுமறைத்துமறைத்து வைக்கும் ஒருபோக்கு நம் தமிழ் மருத்துவத்தில் மிகுதி!

இது தவறான வழியாகும்!

தமிழ் மருத்துவர்கள், ஒருவரிடம் உள்ள இரகசியத்தை மற்றவரிடம் கூறமாட்டார்கள்! மற்றார் அவரிடம் உள்ளதை இவருக்குக் கூறமாட்டார்!

இவ்வாறு தமிழ் மருத்துவர்கள் தங்களுக்குள்ளேயே மருத்துவத் தத்துவங்களை மறைத்துப் பதுக்கியதால்தான், மக்கள் அதனைப் புறக்கணிக்கும் ஒரு நிலை ஏற்பட்டது என்று கூடச் சொல்லலாம்!

மருத்துவப் பெயர்ச்சொற்களுக்கு உரிய பொருளைத் தரும் ஓர் அகராதியாக இந்த நூல்இல்லினும், தொல்காப்பிய இலக்கணத்தில் அறக்கருத்துகள் இருப்பதுபோல், சில அறக்கருத்துகளும் இந்த அகராதியில் உள்ளன!

''ஈவது என்பது கொடுக்கிறது'' என்ற தொடரை எடுத்துக்காட்டாகக் காட்டலாம்.

பொதுவான தமிழ்ச் சொல்லாராய்ச்சிகளுக்கு இச்சுவடி பெரிதும் பயனுடைத்து.

''உத்தரி என்பது பருத்தி'' என்பது இந்நூலிற் காணும் ஒரு தொடர். பருத்தியால் ஆன ஆடை, அதனாற்றான் உத்திரியம் என்று அழைக்கப்பட்டது போலும்; எனவே உத்தரியம் என்பது தமிழ்ச்சொல் தான் என்றும், நமக்கு இதனால் விளங்குகிறது! உத்தரியம் என்ற சொல் வடசொல் போல இன்று வழங்குகிறது!''

சித்த மருத்துவச் சொற்களில் சில புதிய சொல் வடிவங்களை நாம் காணமுடிகிறது!

எடுத்துக்காட்டாக, இந்தப் பதிப்பில்.

ஐயம், ஐய்யம் என்று இருசொற்கள் தரப்பட்டுள்ளன; ஐய்யம் என்று இப்போது நாம் எழுதுவதில்லை.

சித்த மருத்துவத்தில் சில சிறப்புமிகு மருந்துமுறைகள் கையாளப்படுகின்றன. வியத்தகு இம் மருந்து செய் முறைகள் பற்றிய அறிவியல்வழி (Scientific Research) இன்னும் ஓங்க

வேண்டும். அறிவியல்வழி ஆய்வு சித்த மருத்துவத்திற்குக் கட்டாயம் தேவை! அப்போதுதான் அது நம்மண்ணில் காலூன்ற இயலும்!

வியப்பை அளிக்கும் வகையில் அமைந்துள்ள சில சித்த மருத்துவ மருந்து முறைகளில் மூன்றைவருமாறு இங்கு காண்போம்:

1. சண்டமாருதம்

2. வைப்புச்சரக்கு

3. பூநீர்

1. சண்டமாருதம், சண்டமாருதக்குழம்பு என்றெல்லாம் சில தமிழ் ஓலைச் சுவடிகள் உள்ளன.

சண்டமாருதம் என்றால், மிகுந்த வேகத்துடன் குணமளிக்கும் மருந்து என்பது பொருள்.

சண்டமாருதத்தில் சிறப்பு என்ன வென்றால், மூலப்பொருட்களை, காய்ச்சாமல் வடிக்காமல், அல்லது எதுவும் செய்யாமல் அப்படியே சேர்த்தலே! மூலப்பொருள்களை அப்படியே சேர்த்துச் செய்வதே சண்டமாருதம்!

2. வைப்புச்சரக்கு என்பது செயற்கைப் பொருளின் உருவாக்கம் (Synthetic Method).

சாம்பிராணியைப் போல, வேறு பொருள்களைச் சேர்த்து ஒரு 'சாம்பிராணி' உருவாக்கினால், அது வைப்புச் சரக்கு எனப்படும்.

செயற்கை இரப்பர் போன்ற தொழில் நுட்பங்களுக்கு முன்னோறயாகத் தமிழர் இருந்துளர் என்பதற்கு வைப்புச்சரக்கு ஒரு சான்றே!

3. பூநீர் என்பது பூமியில் விளையும் ஓர் உப்பாகும்.

பூநீர் குறிப்பிட்ட காலத்தில், பூமியிலிருந்து அதுவாகவே வெளியே கொப்பளித்து வருவது என்பர்.

செம்மண் நிலத்தில் மட்டுமே இது கிளம்பிவரும் என்று கூறுகின்றனர்.

ஒவ்வோர் ஆண்டும் பங்குனி,சித்திரை மாதங்களில், பௌர்ணமி நாட்களில், இரவில், பூநீர் வெளிவருமாம்; இரவு தொடங்கிக் காலை வரை வருமாம்; காலையில் பார்த்தால், மண்ணோடு மண்ணாகக் கலந்துவிட்டிருக்குமாம்.

இந்தப் பூநீரைத் தான் பார்த்து எடுத்ததாக மெலட்டூர் சித்த மருத்துவர் திரு மரு.ச. அரங்கராசன் என்னிடம் நேரில் தெரிவித்தார்.

ஒருமுறை எடுக்கும் பூநீர் உப்பை அடுத்தமுறை எடுக்கும்வரையில் மருத்துவர்கள் வைத்துக்கொள்வார்களாம்.

பூமியிலிருந்துவெளிக்கிளம்பும் இப்பூநீரானது, ஏறத்தாழ ஒருஅடி ஒன்றரை அடி உயரத்திற்கும் புற்று போல வரும் என்கின்றனர்.

இவ்வாறு சித்த மருத்துவ மருந்துசெய் முறைகளில் எத்தனையோ அதிசயங்கள் உள்ளன!

*மருத்துவச் சொற்களைப் பொறுத்தவரை எண்ணற்ற* சொற்களில் எழுத்துமாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

எடுத்துக்காட்டாக, இந்தச் சுவடியிலேயே, 'கழற்காய் - கழற்சி' என்று ஓரிடத்திலும், 'களங்கி - கழற்சி' என மற்றோரிடத்தும் காணப்படுகிறது. ழ-ள வேறுபாட்டை இங்கே நோக்கலாம். 'கழங்கி' என்று இருக்கவேண்டும் எனத் தோன்றுகிறது; அப்போது, 'கழற்சி' என்ற சொல்லுக்குச் சரியாக வரும் ஆனால், ஓலைச்சுவடி எழுதப்பட்ட காலத்திலேயே, 'களங்கி' என்று கூறும் மரபு வந்துவிட்டது போலும்; ஆகவேதான், நாமும், 'களங்கி' என்ற மக்கள் நாவில் வழங்கிய ஒரு வடிவத்தை அச்சில் பதிப்பிக்க வேண்டியுள்ளது.

*இவ்வாறு ர-ற, ல-ள, ன - ண,எழுத்துகளில் மாற்றங்கள்* ஏராளமான மருத்துவச் சொற்களில் காணப்படுகின்றன.

இந்த மாற்ற வகைக்கு மேலே கண்டதுபோல, இன்னொரு எடுத்துக்காட்டும் காணலாம்.'காகிரெத்தம் வறட்சுண்டி' என்று ஓரிடத்தும்,'காசிரத்தம்' - வரட்சுண்டி' எனறு இன்னோரிடத்திலும் இதே நம் சுவடியில் காணப்படுகிறது. கி - சி என்ற ஓலைச்சுவடிப்பிழை காரணமாக இந்த இரு வடிவங்களும் ஏற்பட்டுள்ளன; இந்த இருவடிவங்கள் ஏற்பட்டுள்ளன என்பதைவிட, இந்த இருவடிவுகளையும் ஓலைச்சுவடியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதே நாம் கருத்திற் கொள்ளவேண்டியது.

சித்த மருத்துவத்தை நாம் இயற்கை மருத்துவம் எனவும் கூறலாம்.

ஏனெனில் இயற்கையாக விளைந்த பொருட்களே சித்த மருத்துவத்தின் மருந்துகள்!

இயற்கையாக விளைந்த பொருட்களும் சூரியனால் பக்குவம் செய்யப்பட்ட பொருட்களுமே தமிழ் மருத்துவத்தில் மருந்துகளாம்.

மரம் செடிகளில் அதுவாகக் கனிந்த பழங்களே சூரியனால் பக்குவம் செய்யப்பட்ட பொருட்கள்!

நம் மண்ணில் விளைந்த பொருட்களே நம் உடலுக்கு ஏற்றது என்பது ஓர் அறிவியல் உண்மையாகும்!

இயற்கைத் தாவரங்கள் கூட, அயல் மண்ணிலிருந்து ( வெளிநாட்டிலிருந்து) நம்மண்ணுக்கு வந்தால், இங்குள்ள இயற்கைச் சமன்பாடுகளைக் குலைத்துவிடுகின்றன என்று தாவரவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

எடுத்துக்காட்டாக, வேலிக்காத்தான் அல்லது வேலிக்கருவை என்று சொல்லப்படும் தாவரமானது நம் மண்ணின் இனமல்ல; மெக்சிகோ நாட்டிலிருந்து இங்கு இறக்குமதியானது. இதனால் நம்மண்ணில் உள்ள நீர் மற்றும் சத்துகளை உறிஞ்சி, நமது மண்ணைப் பாலைநிலமாக மாற்றி வருகிறது என்று தாவரவியல் அறிஞர்கள் மொழிந்துளர்.

அதைப்போலவே தைலமரம் என்று சொல்லப்படும் மரமும் நமது மண்ணுக்கு உரிய மரமல்ல;இது, ஆஸ்திரேலியா நாட்டிலிருந்து நமது மண்ணுக்கு இறக்குமதியானது ஆகும். ஆதலால், இந்தத் தைலமரத்தாலும் நமது மண்ணின் செழுமை வெகுவாகப் பாதிக்கிறது என்று தாவரவியல் அறிஞர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

அதேபோழ்து நமது மண்ணுக்கே உரிய மாமரம் வேப்பமரம் முதலியமரங்களால் நம் மண்ணின் வளம் பாதிக்கப் படுவதில்லை என்றும் அவ்வறிஞர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆகவே நமது மண்ணும், அதில் விளைந்த பொருள்களும் நமது வாழ்வோடு பின்னிப் பிணைந்தவை என்பதை நாம் உணரலாம். இவ்வகையில்தான், தமிழ் மருத்துவம் பகரும், நமது மண்ணில் விளைந்த பொருட்கள் மிகுந்த இன்றியமையாத ஓர் இடத்தைப் பெறுகின்றன.

மொழியியல் நோக்கில் தமிழ்மருத்துவச் சொற்கள் நன்கு ஆயத்தக்கன; இத்தகைய ஆய்வு இதுவரை மேற்கொள்ளப்பட வில்லை.

எடுத்துக்காட்டாக, ண,றி,ள,ங,க,ற ஆகிய எழுத்துகள் அமைந்த மருத்துவச் சொற்களை நோக்கினால், அவற்றில் பல நமது இலக்கிய, பேச்சு வழக்கில் இல்லாத பயன்பாட்டைக் கொண்டுள்ளனவாகக் காட்சியளிக்கின்றன!

எடுத்துக்காட்டாக,'காஞ்சோறி' என்ற சொல்லின் ஈற்று வல்லின றகர இகரத்தைச் சுட்டலாம்; இத்தகைய றகர இகரமானது நமது பொதுப்படையான இலக்கிய, பேச்சு வழக்குகளில் அருகியே காணப்படும்.

காக்கணம் என்ற சொல்லை எடுத்துக்கொள்ளலாம்;இதில் வரும் ணகரத்தின் பயன்பாடு, சொல்லின் ஈற்றில், நமது பிற ஆட்சிகளில் மிகக் குறைவே.

இவ்வாறு மேலும் பல இந்த அகராதியில் வருகின்றன.

தமிழ் மருத்துவத்திற்கும் வானியலுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது.

பழந்தமிழகத்தில் தமிழ் மருத்துவத்தில் ஈடுபட்டிருந்தோர், வானியல் என்ற சோதிட அறிவையும் ஓரளவுக்குப் பெற்றிருந்தனர் எனலாம்.

மருந்துப் பொருளை இன்ன நேரத்தில்எடுக்க வேண்டும் என்பதிலிருந்து அதை இன்ன நேரத்தில் சாப்பிடவேண்டும் என்பதுவரை ஒவ்வொரு கட்டத்திலும் நாளையும் கோளையும் பார்த்துத்தான் தமிழர்கள் மருத்துவம் செய்வார்கள்.

ஆங்கில மருத்துவர்கள் கூட, இன்ன மருந்தை இரவில் சாப்பிடு, இன்ன மருந்தை காலையில் சாப்பிடு என்று சொல்வதில்லையா?

எனவே, மருந்தை உண்ணும் வேளை அல்லது காலம் என்பது கருத்தில் கொள்ளத் தக்கதுதான்; இதில் மூடநம்பிக்கை இல்லை.

ஆனால், தேவையில்லாமல் பஞ்சாங்கம் பார்த்து, மருத்துவ நுட்பத்தை இழந்து நிற்கும் சில மருத்துவர்களால்தான், காலநேரம் பார்ப்பது மூடநம்பிக்கை என்ற கருத்து ஒரேயடியாக வேரூன்றிவிட்டது!

சிறுசிறு ஐயப்பாடுகளைக் களையும் வகையிலும், இந்தப்பதிப்பு நமக்கு உதவுகிறது.

''மலசலம் கழிக்கக்கூடாது'' என்று அந்த காலத்தில் எழுதியிருப்பார்கள்; இங்கே சலம் என்றால் என்ன பொருள்? நமது சுவடியில் இதற்கு விளக்கம் இருக்கிறது! சலம் - மூத்திரம் என்று இந்த ஓலைச்சுவடியில் உள்ளது.

தமிழ் இலக்கணத்தில் கூறப்படும் சாரியை என்பது நமக்குத் தொடர்பில்லாததுபோல எண்ணுகிறோம்! ஆனால் சாரியைகள் மருந்துப் பெயர்களில் வந்து வந்து உறவாடுகின்றன! தமிழ் மருந்துப் பெயர்கள் சாரியைகளைக் கொண்டு விளையாடுகின்றன!

எடுத்துக்காட்டாக இலவு என்று ஓர் இடத்திலும், இலவம் என மற்றோரிடத்தும்,இலவன் என்று இன்னோரிடத்திலும் ஓலைகள் எழுதிக்காட்டுகின்றன! உகர,அம்,அன் - சாரியைகளை இந்த மூன்று சொற்களிலும் முறையே நாம் கண்டு துய்க்கிறோம்!

ஓலைச்சுவடியிலிருந்து பதிப்புப் பெறும் இந்த நூலில் வரும் சில சொற்கள் நம் கருத்திற்குரியனவாக உள.

எடுத்துக்காட்டாக, மின்மினிப்பூச்சி என்றுதானே நாம் கூறுகிறோம்?

ஆனால் இந்த நூலில் மின்னாம்பூச்சி என்றொரு வடிவம் இதே பூச்சிக்கு ஆளப்பட்டுள்ளது!

மின்னாம்பூச்சி என்ற சொல்லில் நடுவே வந்துள்ள ஆகாரம், சாரியை.

இதே பாங்கில் இலக்கிய நயமாகவும் சில பொருட்கள் விளக்கப்படுகின்றன!

முடக்கொற்றான் என்பதற்கு இந்த ஓலைச் சுவடி, என்ன நுவல்கிறது தெரியுமா?

சுடுகாடுறையன்!

அஃதாவது, பெரும்பாலும் முடக்கொற்றான் எனும் இந்தச் செடி, சுடுகாடுகளில் தான் வளரும் என்பதால், அதற்குப் பெயரே சுடுகாடுறையன் என்று வைத்துவிட்டார்கள்!

மருத்துவச் சொற்களில் சுவடிக்குச்சுவடி எழுத்து வேறு பாடுகள் காணப்படுகின்றன!

ஆனால், மருத்துவம் எனும் அடிப்படைத்தத்துவத்தின் முன் எழுத்துவேறுபாடுகள் ஒன்றும் பெரிதல்ல என்பது உண்மைதான்; எனினும் மருந்துப் பொருட்களின் பெயர்கள் சரியாக எழுதப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வகையில், சில பிழையான வடிவங்கள் பதிப்பில் வந்துவிட்டாலும், ஒப்பிட்டு ஆய்பவர்களுக்கு இதுபோன்ற பதிப்புகளே பயன்படும் அல்லாமல், ஓலைச்சுவடிகளை வைத்துக்கொண்டு, மருந்துச்சொல் ஆய்வு நடத்துவது எளிதான செயல் அல்ல!

எனவே இப்பதிப்பின் இன்றியமையாமை பெறப்படும்.

தமிழ் மருந்துப் பெயர்கள் என்றே நாம் தனியாக ஆய்வை மேற்கொள்ளலாம்;அந்த அளவுக்குச் சொல் வளமும், பண்பாட்டு வளமும் மருந்துப் பெயர்களில் காணப்படுகின்றன.

சில பொருட்களுக்குப் பலவகையான பெயர்கள் சித்தமருத்துவத்தில் காணப்படுகின்றன !

ஏன் இப்படி?

பலவகையான பெயர்கள் ஒரே பொருளுக்கு வழங்குவது, அம்மருந்துப் பொருளானது பரவலாகத் தமிழகம் முழுவதும், தொன்றுதொட்டுக் கையாளப்பட்டதற்கு ஓர் அடையாளமாகும்!

அடிக்கடி பயிலும் பொருட்களுள் சந்தனம்,பொன்,கள் ஆகியன குறிப்பிடத்தக்கன.

எந்த ஒரு மருத்துவ ஓலைச் சுவடி அகராதியை நீங்கள் எடுத்துக்கொண்டாலும், இந்த மூன்று சொற்களும் கட்டாயம் அதில் காணலாம்!

சந்தனத்தை அரைப்பதற்கென்றே தனி வட்டக்கல் அந்த நாளில் இருந்துள்ளது; ''வான்கேழ் வட்டம்'' என்று இதுவே நெடுநல்வாடையில் பேசப்பட்டது.!

பொன்னானது தமிழர் வாழ்வில் பின்னிப்பிணைந்தது ; தாலி ஒன்றே போதுமே!

எவ்வளவு ஏழையாக இருந்தாலும், தங்கத்தில் தாலி போடுவது என்பது இன்றுவரை நின்று நிலைக்கும் பண்பாடு ஆயிற்றே!

இவற்றைப்போலவே, கள்ளும் ஒரு குறிப்பிட்ட காலகட்டம் வரை தமிழர் வாழ்வில் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது என்பதில் ஐயமில்லை'' சிறியகட் பெறினே எமக்கீயும் மன்னே'' என்று ஔவையார் பாடவில்லையா? ஔவையாரே கள் குடித்தார் என்றால், பிற ஆடவர்களின் நிலையைக் கேட்கவேண்டுமா?

கள்ளானது தமிழ் மருத்துவ அகராதிகளில் அதிகம் பயிலுவதால், கள் சமுதாயத்தில் நன்கு புழக்கத்தில் இருந்த ஒருகாலகட்டத்தில் தமிழ் மருத்துவ அகராதிகள் பழக்கத்தில் இருந்தன என்று கருத இடம் ஏற்படுகிறது.

தமிழ் எழுத்துகள் பற்றிய ஆய்வில் சித்த மருத்துவத்திற்கும் இடம் உளது!

நம்மிடம் உள்ள 247 தமிழ் எழுத்துகளில் சில மொழிக்கு முதலாக வருவதில்லை, எடுத்துக்காட்டாக நூ வைச் சொல்லலாம்.

ஆனால் இத்தகைய எழுத்துகள் ஒரு காலத்தில் தமிழர் வழக்கில் மொழிக்கு முதலாக இருந்திருக்க வேண்டும் என்ற முடிவையே தமிழ் மருந்துப் பெயர்கள் நமக்குப் புகட்டுகின்றன.

எடுத்துக்காட்டாக, ஞொ- என்ற எழுத்தை முதலாகக் கொண்ட சொற்கள் இன்று நம்மிடையே பழக்கத்தில் இல்லை; ஆனால், இங்கே பதிப்புப் பெறும் இந்த மருத்துவ ஓலைச்சுவடியில் ஞொயாய் என்று ஒரு சொல், ஞொ-வை முதலாகக் கொண்டு வரையப்பட்டுள்ளமை நோக்கற்பாற்று.

சித்தமருத்துவச் சொற்களைப்பதிப்பிப்பதில் இருக்கும் சிக்கல் பற்றி முன்பே குறிப்பிடப்பட்டது. இங்கு மேலும் ஓர் எடுத்துக்காட்டைக் காண்போம்.

சில ஓலைச்சுவடிகளிலும், சில பழைய அச்சு நூற்களிலும் புறா முட்டை என்றொரு சொல் காணப்படும். புறாமுட்டை என்றுள்ள அதே இடத்தில், வேறொரு ஓலைச்சுவடியில் பேராமுட்டை என்று இருக்கும்! அதே இடத்தில் இன்னொரு

ஓலைச்சுவடியானது பேராமுட்டி என்று அதே மருந்துப் பெயரைக் குறித்திருக்கும்!

எது சரி?

பேராமுட்டி என்பதே சரியான வடிவம்

எவ்வாறெனில், சித்தாமுட்டி என்றொரு சொல்லும் சித்த மருத்துவ ஓலைச் சுவடிகளில் காணப்படுகிறது. ஆகவே, சிற்றெறும்பு, கட்டெறும்பு என்பது போல, சித்தாமுட்டி என்பதற்கு இணையாகப் பேராமுட்டி என்ற சொல்வரவே தமிழ் மரபிற்கு ஏற்றதாகும்.

தமிழ் மருத்துவப் பெயர்கள், தமிழ்ப்பண்பாட்டு ஆய்வுக்குக் களமாக விளங்குகிறது என்று முன்பே கூறப்பட்டது.

இதுபற்றி இங்கு மேலும் விளக்கலாம்.

தமிழ் மருந்தும் பெயர்களில் ஆங்காங்கே,

சிவனார் வேம்பு
ஈசுரமூலி
திரிபுரத்தான்
திரிபுரமெரித்தான்

என்றெல்லாம் பயிலுகின்றன.

இதில் பண்பாட்டுக்கூறு உளது!

''தென்னாடுடைய சிவனே போற்றி'' என்ற வாக்கு இங்கு ஒப்பிடத்தகுந்தது.

சிவனின் உறைவிடம் வடக்கே உள்ள கயிலாயம் என்று பேசப்படினும், தென்னாட்டுக்கும் சிவனுக்கும் உள்ள தொடர்பு மேலை மருத்துவப் பெயர்களாலும் வலுவடைகிறதல்லவா?

சித்தமருத்துவ மருந்துப் பெயராய்வில், இன்னொரு அற்புதத்தையும் நோக்கலாம்.

எதிர்ச்சொல் முறையில் பல மருந்துப் பொருட் சொற்கள் அமைந்துள!

சிற்றரத்தை என்று ஒருபொருள் உண்டு; பேரரத்தை எனவும் ஒரு மருந்துப் பொருள் இருக்கிறது.

சிற்றாமணக்கு என்று ஒரு பொருள் உண்டு;பேராமணக்கு எனவும் ஒருபொருள் இருக்கிறது.

சிற்றாமுட்டி,பேராமுட்டி ஆகியவற்றை முன்பே பார்த்தோம்!

சித்தமருத்துவம் பொருட்களுள் தண்ணீர்விட்டான் என்பது குறிப்பிடத்தக்கது!

இது ஒரு கிழங்கு அல்லது வேர் ஆகும்.

*தண்ணீர்மீட்டான் என்றும் இதனைக் குறித்துளர்.*

தண்ணீர்ப் பஞ்ச காலத்தில் காடுகளில்,குரங்கு போன்ற விலங்குகள் இந்தத் தாவரத்தைத் தேடிப்பிடித்து, இதன் வேரில் உள்ள நீரைப் பருகுமாம்!அந்த அளவுக்கு இதன் வேரில் தண்ணீர் நிறைந்து காணப்படும் என்பர்.

தண்ணிமுட்டான், தண்ணிமிட்டான் என்றெல்லாம் சில ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டுள. தாவரம் தண்ணீர்விட்டான் தாவரமே!

தண்ணீர்விட்டான், தண்ணீர்மீட்டான் ஆகிய இரு வடிவங்களும் சரியான சொல்வடிவங்களே; ஏனைய பிழையானவை.

மேற்கண்டாங்கு ஒரே பொருள், சில வகை வடிவங்களில் வழங்கப்பட்டமை குறித்து நமது இச்சுவடியும் சிறிது சிந்தித்துள்ளது!

சிந்தித்து அவ்வாறு வழங்கப்படும் வேறுபட்ட வடிவங்களைத் தந்து, 'அப்படி கூறப்பட்டாலும் அதற்கு இதுவே பொருள்'' என்ற பாங்கில் பொருள்களை எழுதிச் செல்கிறது இந்தச் சுவடி.

எடுத்துக்காட்டாக 'முளட்டின்' என்று இரு இடங்களில் ஒருபொருளைக் குறித்த இச் சுவடி, வேறு இடத்தில், 'மூழட்டின்' என்று குறித்து அதற்கும் அதே பொருளையே நல்கியுள்ளது.

இந்த ஓலைச்சுவடியில் அகர வரிசையில் வரவேண்டிய சொற்களும், இகர வரிசையில் வரவேண்டிய சொற்களும் முறையே யகர, யிகர வரிசைகளில் வந்துள. அதில் என்ன ஒலி நுட்பம் என்பது விளங்கவில்லை; எனவே ஓலையில் உள்ளபடியே பதிப்பிடப்பட்டுள்ளன.

பொதுவாக இந்திய மருத்துவத்திற்கு அடிப்படை தமிழர்கண்ட சித்த மருத்துவமே!

நாடி என்று கூறுவது தமிழர் கண்ட நாடிகளே!

வாத நாடி, பித்தநாடி, சிலேட்டும நாடி என்பவை தமிழர் சொத்தாகும்.

வாதநாடி என்பது காற்று தொடர்பானது என்பர்.

பித்தநாடி என்பது வெப்பம் தொடர்பானது என்பர்.

சிலேட்டும நாடி என்பது நீர் அல்லது குளிர்ச்சி தொடர்பானது என்பர்.

வளி, அழல், ஐயம் என்று தமிழில் இதையே குறித்தனர்.

இந்த மூன்று நாடிகளும், முன்கையில் இருக்கக்கூடிய ஒரே நரம்பில் பார்க்கப்படுபவை என்பர்; மூன்று நாடிகளையும், மூன்று நரம்பில் பார்ப்பது இல்லை என்று அறிஞர்கள் உரைப்பர்.

மூன்று நாடிகளை ஒவ்வொருவரும் அனுபவத்தில் பார்க்கலாம்.

துடிக்கும் இந்த நாடிகளுக்கும் உடற்கூறுகளுக்கும் நிச்சயமாகத் தொடர்பு உண்டு. எனவே, நாடித்துடிப்பைப் பொறுத்தவரை மூடத்தனத்திற்கு இடமில்லை. இன்ன துடிப்புக்குக் காரணம் இது என்று தமிழ் மருத்துவம் சொன்னதை நம்மவர்கள்

விளக்கிக் கூறுவதில் பிழைகள் இருக்கின்றன; அதனால் தான், மொத்தமும் மூடநம்பிக்கை என்றாகிவிட்டது!

உடம்பில் இருக்கும் இனிப்புச்சத்து, உப்புச்சத்து,போன்ற சத்துகளின் அளவுகளைக்கூட நாடித் துடிப்பு மூலம் அறியலாம் என்பர்.

புற உலகில் சில சுவைகள், இனிப்பும் சுவையாக மாறக் காண்கிறோம்; அதைப்போலவே, அதே சுவைகள் உடம்புக்குள்ளும் இனிப்பாக மாறுகின்றன என்பது தமிழ்மருத்துவக் கொள்கை ஆகும்; ஆனால் இது அறிவியல் அடிப்படையில் நிரூபிக்கப்படவேண்டும்.

எடுத்துக்காட்டாக, கசப்பான வேப்பம் பழம், கனிந்த பிறகு ஓரளவுக்கு இனிக்கிறது; கசப்பு, இனிப்பாக மாறுவதற்கு இது ஓர் அடையாளம்.

புளிப்பான மாங்காய், கனிந்தால் இனிக்கிறது; புளிப்புப் சுவை உடம்புக்குள் இனிப்புப் பொருளாக மாறும் என்பதற்கு இது ஒரு அடையாளம்.

கரும்பின் நுனி உப்புக் கைக்கிறது; பிறகு முற்றினால் இனிக்கிறது; உப்புச் சுவை, உடம்பில் இனிப்பாக மாறும் என்பதற்கு இது ஒரு அடையாளம்!

இவையெல்லாம் தமிழர்கண்ட மருத்துவ உண்மைகள்; இவைகளை அறிவியல் அடிப்படையில் ஆய்ந்து உலகுக்கு அறிவிப்பது தேவையானதாகும்!

தமிழர் கண்ட திணைகளில் வரும் தாவரங்களும் குறிப்பிடத்தக்கன.

போரின் போது சூடிச் செல்லும், வெட்சி, கரந்தை, தும்பை, வாகை, உழிஞை ஆகியன புண்களைக் குணமாக்கும் மூலிகைகளே எனலாம்.

வஞ்சி என்பது சீந்தில் என்பர்; அமுதவல்லிக்கொடி என்றும் இதை அழைப்பர்.

காஞ்சி என்பது எட்டிமரம் என்பர்.

நெய்தல் என்பது நீலோற்பலம் என அழைக்கப்படுவதாகும்; கொட்டிக்கிழங்கு என்றும் இதனைக் கூறுவர்.

உழிஞை என்பது இன்றும் மலையாளத்தில் உழிஞா எனப்படுகிறது; முடக்கொற்றான் என்று இதையே தமிழ் மருத்துவம் குறித்தது.

இங்ஙனம் தமிழர் வாழ்வும் சித்தமருத்துவமும் பிரிக்க இயலாததாக உள்ளது!

எனவே இவ்வகைகளில், தற்போது பதிப்பிக்கப்பெறும் இந்நூல் தமிழ்கூர்நல்லுலகிற்குப் பேரொளியாகும் எனலாம்.

முனைவர் சு. சௌந்தரபாண்டியன்
எம்.ஏ. (தமிழ்), எம்.ஏ. (ஆங்)பி.எட்.டிப்.வ.மொ, பிஎச்.டி
*பதிப்பாசிரியர்*

# LIVE MANUSCRIPT ON LIFE

This present publication is being published from a palm leaf which runs in simple sentences like a nikhantu.

Herein we come to know alternative names to many medicinal substances which remain a puzzle to indigenous doctors often.

This opens my new vistas to continue research not only in medicinal line but also in various fields like Tamil grammar, culture and even history.

Siddha medical books are a testimony to Tamils' talent of scientific analysis of nature and this book will also prove this notion.

**Dr. S. Soundarapandian**
M.A. ( Tamil) M.A. ( Eng.) B.Ed. Dip. Skt. Ph.D.
Curator
Govt. Oriental Manuscripts Library
Chennai-5.

# மருத்துவப் பெயரகராதி

## அ

அக்கம் என்பது தான்றிக்காய்

அக்கரம் என்பது கறுப்புட்ட மாமரம்

அக்காந்தான் என்பது தான்றிக்காய்

அக்காளம் என்பது உள்வயிரமுள்ள மரம்

அக்கிடம் என்பது வசம்பு

அக்கு என்பது பலகரையாம்

அக்குவா என்பது பல்காரம்

அகத்தி என்பது உபால முலைப்பால்

அகத்தியன் என்பது தமிழ்க்குரியவன்

அகம் என்பது கந்தகம்

அகாகலம் என்பது அகில்

அகிமார் என்பது வெள்வேல்

அங்கணம் என்பது வெங்காரம்

அங்காரம் என்பது மூல்

அங்கார வல்லன் என்பது குருஞ்சில்

அங்கிடச பாதி என்பது சிறுபுள்ளடி

அங்கினி என்பது கற்றாழை

அங்குச பிசாரி என்பது கொள்ளு

அங்குச ரோசன் என்பது கூகைநீரு

அங்குன் என்பது சவரிலோத்திரம்

அங்கோலம் என்பது அழிஞ்சி

அச்சகம் என்பது வெங்காயம்

அச்சம் என்பது இகறிப்புல்லு, அகத்தி

அச்சமரம் என்பது நான்முகப் பல்லு

அசமதாகம் என்பது ஓமம்

அசமம் என்பது அசமதாகம்

அசமம் என்பது நீர்முள்ளியாகும்

அசுவகம் என்பது பசு

அசுவகந்தி என்பது அமுக்குரா, குதிரை மூத்திரம்

அசுவபரி என்பது அலரியாம்

அசுவம் என்பது அமுக்குரா; குதிரை

அசுவாதம் என்பது அரசமரமாகும்

அசுனம் என்பது வெள்ளைப்பூண்டு

அசோதம் என்பது சவரிலோத்திரம்

அசோனம் என்பது வரழை

அஞ்சலி என்பது வறட்சுண்டி

அட்டகம் என்பது வசம்பு

அட்டதாய் என்பது சரமூலம்,

கொடுவேலி,

எருக்கு,

நெருஞ்சி,

மாவிலிங்கம்,

சங்கங்குப்பி,

தழுதாழை,

குமிள்,

பாதிரியிலை

அட்டர் என்பது சாதிக்காய்

அட்டவர் என்பது பெருங்காயம்,

திப்பிலி,

கருஞ்சீரகம்,

மிளகு,

ஓமம்

அட்டி என்பது இலுப்பை

அட்டிமதுரம் என்பது அதிமதுரம்

அட்டிமை என்பது சீரகம்

அட்டியும் மாட்டியும் என்பது அதிமதுரம்

அட்டியோகம் என்பது அரப்பொடி

அடவிக்க செல்வம் என்பது கஸ்தூரி மஞ்சள்

அடவிக்கோல் என்பது கோரோசனம்

அடவிகம் என்பது சாம்பல்

அண்டம் என்பது கோழிமுட்டை

அணிச்சை என்பது நாகமல்லி

அத்தடம் என்பது அதிவிடையம், பொன்

அத்தி என்பது எலும்பு

அத்திகண்ணி என்பது கரிசலாங்கண்ணி

அத்திசம் என்பது நீர்முள்ளியாம்

அத்திநெய் என்பது அதவிப்பிசின்

அத்திமானம் என்பது ஆமணக்கு

அத்தியாகிமை என்பது கருஞ்சீரகம்

அத்திரம் என்பது நாக்கில்

அத்திரா என்பது அரசு

அத்துகம் என்பது ஆமணக்கு

அத்துமாணி என்பது அர்ச்சுனன்

அத்துவாகாயம் என்பது கருஞ்சீரகம்

அதகம் என்பது முத்து, முருந்து

அதர் என்பது அத்தியாகும்

அதரம் என்பது மஞ்சள்

அதவு என்பது அத்தியாகும்

அதிக்கோய் என்பது அழிஞ்சியிலை

அதிகோலம் என்பது அழிஞ்சி

அதிதாரம் என்பது இலந்தை

அதிபதிசங்கென்பது வாலுளுவை

அதிபதிஞ்சி என்பது கொடிவேலி

அதிமதுரம் என்பது குண்டுமணி வேர்

அதிவிடம் என்பது அதிவிடையம்

அந்தகாரம் என்பது நெல்லி

அந்திரலசுணம் என்பது கொட்டைப்பாக்கு

அப்பட்டர் என்பது வட்டத்திருப்பி

அம்படம் என்பது புழுக்கொல்லி

அம்புயம் என்பது தாமரை

அம்புவாகினி என்பது பாதிரி

அம்ம என்பது தண்ணீர்

அமர்குணா என்பது கடுக்காய்ப்பூ

அமரி என்பது மூத்திரம்

அமலகம் என்பது நெல்லிக்காய்

அமுகாரி என்பது பூனைக்காலி

அமுதசுரான் என்பது, வெள்வேம்பு

அமுதம் என்பது கடுக்காய்ப்பால்

அமுதவல்லி என்பது சீந்தில்

அமுது என்பது பால்

அய்யம் என்பது கடுகு

அயிரகம் என்பது முனக்குரான்

அயோமலம் என்பது கிடம்

அர்க்கம் என்பது சுக்கு

அரசாணம் என்பது அரசுமுத்தான்

அரத்தை என்பது தும்புருஷ்டம்

அரதனம் என்பது மணியாம்

அரந்தம் என்பதுசெங்கழுநீர், தாமரை, கடுக்காய்.

அரம்பை என்பது வாழை,

அரல் என்பது சேற்றுமம்.

அரிட்டம் என்பது கடுகுரோகணி; வேம்பு; மிளகு

அருட்டி என்பது மிளகு

அருட்டேன் என்பது மிளகு

அரேணுகம் என்பது வால்மிளகு

அரைமுறி என்பது பச்சிலை

அவத்திக்கண்ணி என்பது மெருகு

அவயவெண் என்பது கடுகு

அவிஷதம் என்பது மருந்து

அளகப்பேதம் என்பது அதிவிடையம்

அறிக்கி என்பது கடுக்காய்

அறிசனம் என்பது மஞ்சள்

அறிசா என்பது பெருவரு மீன்

அறிதாளம் என்பது அரிதாரம்

அறுசுவை என்பது மங்கிஷபேதி,

சாத்திரபேதி,

பரிசினபேதி,

தூக்குபேதி,

ஆபேதி. ஆக 5.

## ஆ

ஆகாசத்தூள் என்பது ஒட்டடை

ஆகாயத்தாமரை என்பது கொட்டைப்பாசி

ஆகாரம் என்பது சோறு சாப்பிடுதல்

ஆசியம் என்பது கருஞ்சீரகம்

ஆசையம் என்பது பொன்னாகம்

ஆட்சை என்பது துவரை

ஆண்டலை என்பது பூவில்லாமரம்

ஆத்தின் என்பது புருவமத்தியம்

ஆத்துமுள்ளி என்பது கண்டங்கத்திரி

ஆத்தூர் முத்தான் என்பது பூனைக்காலி

ஆதம்பேத்தி என்பது செப்பு நெருஞ்சி

ஆதளை என்பது காட்டாமணக்கு

ஆம்பலா என்பது புளியாரை

ஆம்பால் என்பது அல்லிச்செடிக்கள்ளு

ஆம்புவம் என்பது சுரை

ஆமரிக்கென்பது நெல்லியாகும்

ஆமல் என்பது விஷமூங்கில்

ஆமலகம் என்பது நெல்லிக்காயாகும்

ஆமாவம் என்பது சுரை

ஆர் என்பது ஆத்தி

ஆர்கோதம் என்பது கொன்றை

ஆர்வரியம் என்பது அரசு

ஆரம் என்பது கோடசப்பாலை முத்து

ஆரே என்பது நாவிதழ்க்குறை

ஆலக்காலம் என்பது விஷம்

ஆலுகம் என்பது வில்வம்

ஆவம் என்பது குங்குமம்

ஆவாகை என்பது நிலவாகை

ஆவிப்பதம் என்பது பேராமுட்டி

ஆளகம் என்பது சுரை

ஆனைக்கண்ணி என்பது அத்தித்துளிர்

## இ

இகுர் மூலி என்பது பெருமருந்து

இச்சி என்பது அரசு

இடக்கும் என்பது சங்குமுட்டி

இதளை என்பது தொப்புள்

இந்திர கந்தம் என்பது நன்னாரி

இந்திரகோபம் என்பது தாம்பூலப்பூச்சி, நாக்குப்பூச்சி

இந்திரவல்லி முகில் என்பது கொத்தான்துளிர்

இந்து என்பது சந்திரனாகும்

இந்துளபம் என்பது நெல்லியாகும்

இபம் என்பது யானைக்கொம்பு

இபாந்து என்பது கல்லுப்பு

இயல்பூதி என்பது இண்டிலை

இயற்பு என்பது குணமாகும் என்றறியவும்.

இயாகம் என்பது கொன்னை

இயைமே என்பது கொன்னை

இரசிதல் என்பது வென்னியாகும்

இரத்தம் என்பது ததியாகும்

இரத்தி என்பது இலந்தை யாகும்

இரல் என்பது பதுக்கை

இரலி என்பது இச்சிச் செடி

இரலை என்பது புல்வாய்

இரவனின்பம் என்பது சிவனார்வேம்பு

இராசியம் என்பது தாமரைப்பூ

இராடம் என்பது வெங்காயமாகும்

இரால் என்பது தேன்

இரியல் என்பது லவங்கப்பட்டை

இருசயுகமை என்பது பாலாகும்

இருசிறியார் என்பது கருஞ்சீரகம், நற்சீரகம்

இருஞ்சில் என்பது மகிழம்.

இரும்பு என்பது தாமரை

இரும்பு கொல்லி என்பது சிவனார்வேம்பு

இருவல் என்பது வெள்ளீயம்

இருவேலி என்பது வெட்டி

இவார்வடி என்பது ஏலம்

இன்பூறல் என்பது சாயவேர்

## ஈ

ஈகை என்பது கொடுக்கல், பொன்

ஈங்கம் என்பது சந்தனம்

ஈசன் தேவி என்பதுகௌரி

ஈசுர மூலி என்பது பெருமரம்; பெருமருந்து

ஈசுரன் விந்து என்பது இரசம்

ஈதல் என்பது கொடுக்கல்

ஈமரம் என்பது குங்குமப்பூ

ஈயை என்பது சஞ்சீவி

ஈர் என்பது கரும்பாகும்

ஈர்ப்பா என்பது அசனி

ஈரணம் என்பது கள்ளி

ஈவது என்பது கொடுக்கிறது

ஈன்றவள் என்பது பெற்றவள்

ஈனத்தார் என்பது கொன்னை

# உ

உக்கம் என்பது ஆசையாகும்

உக்கிரகந்தம் என்பது வசம்பு

உகமல்லி என்பது நாகமல்லி

உகிழந்துளிர் என்பது அரம்பு

உகின் என்பது புளியமரம்

உங்காரணை என்பது அவுரி

உடல் என்பது பொன்

உடுப்பாதகம் என்பது அணையாகும்

உண்டுகம் என்பது பெருவாகை

உண்டை என்பது காக்காய்

உத்தகு என்பது புங்கு

உத்தம்பரி என்பது கொத்தமல்லி

உத்தமதாளி என்பது வேலிப்பருத்தி

உத்தரி என்பது பருத்தி

உத்தாபலம் என்பது சங்கன் செடி

உத்தி என்பது அபின் மருந்து

உதகம் என்பது தண்ணீர்

உதரம் என்பது வயிறு

உதருவி என்பது மரமஞ்சள்

உதாம்பரம் என்பது செம்பு

உதிரிமுறிப்பன் என்பது விஷ்ணுகிரந்தி

உந்தி என்பது தொப்புள்

உப்புல் என்பது செங்கண்ணி

உபகுல்லம் என்பது சுக்கு

உபகுவம் என்பது திருப்பாலை

உபலோகத்திரம் என்பது வெள்ளி

உபவம் என்பது சீந்தி

உமர் என்பது குண்டுமணியாம்

உமலதம் என்பது அரிதாரம்

உமாகூடம் என்பது புல்லாகும்

உரு என்பது அமடம்

உருத்திரம் என்பது மஞ்சள்

உருவாரம் என்பது வெள்ளரி

உருளரிசி என்பது கொத்தமல்லி

உல்லரி என்பது துளிர்

உலாங்கம் என்பது மனோசிலை

உலாங்குலி என்பது பெருஞ்சீரகம்

உலிமறி என்பது நாயுருவி

உலுவம் என்பது வெங்காயம்

உள்ளி என்பது வெங்காயம்

உறல்பலம் என்பது செங்கண்ணி

உரைகல் என்பது வெங்கலம்

உன்மதகி என்பது குறிஞ்சான்

## ஊ

ஊதிகை என்பது முல்லை

ஊமிளை என்பது சிறுபூளை

ஊமை என்பது திரி

ஊர்புகம் என்பது ஆமணக்கு

ஊரில் அழகர் என்பது எருக்கிலை

ஊருடன் மூலி என்பது முருங்கை

ஊருவார்ப்பன் என்பது வெள்ளரிக்காய்

ஊழியக்காரன் என்பது இரசம்

## எ

எகுண்டு என்பது குண்டுமணி

எச்சம் என்பது கழிச்சல்

எட்கம் என்பது தென்னைமரம்

எட்டி என்பது விஷமுட்டி

எட்டிகம் என்பது சீந்தில்

எபத்திரம் என்பது மலையத்தி

எமநாசம் என்பது ஓமம்

எருந்தி என்பது எருமட்டி

எருவை என்பது கழுதை

எலிப்பாலை என்பது காட்டாமணக்கு

## ஏ

ஏகவாசம் என்பது அகம்

ஏகவாவல்லி என்பது பால்

ஏதினை என்பது புளியமரம்

ஏமனாகம் என்பது ஊமத்தை

ஏரடம் என்பது இடியாகும்

ஏரண்டம் என்பது ஆமணக்கு

ஏரணம் என்பது ஆமணக்கு

ஏலி என்பது கள் சங்கஞ் செடி

ஏனத்துப் பால் என்பது பன்றிப்பால்

ஏனம் என்பது தினையரிசி; எள்ளு

## ஐ

ஐசிலம் என்பது சிறுநாகப்பூ

ஐயம் என்பது சேற்றுமம்;பிச்சையெடுத்தல

ஐவந்தார் என்பது மனை

## ஒ

ஒங்கலம் என்பது விஷமூங்கில்

ஒச்சை என்பது எச்சை

ஒண்ணி என்பது பொன்

ஒத்திமம் என்பது விஷமூங்கில், புளியமரம்

ஒருவை என்பது ஆடு

## ஓ

ஓசை என்பது வாழை

ஓமம் என்பது அசமதாகம்

ஓமை என்பது மாமரம்

ஓலம் என்பது பிரம்பு

## ஔ

ஔவை என்பது அவைநஞ்சு

## க

கக்குடு என்பது மஞ்சள்

கக்கோரம் என்பது மாமரம்

ககமாதம் என்பது மணத்தக்காளி

ககனம் என்பது துத்தநாகம்

கங்குரம் என்பது தினை

கசராகம் என்பது கொள்ளு

கசாபர் என்பது மஞ்சள்

கசைதசை என்பது அபினி

கஞ்சம் என்பது தாமரை

கஞ்சாம் என்பது செம்பு

கஞ்சான் என்பது கஞ்சாங்கோரை

கஞ்சுரம் என்பது முருக்கு

கட்சாடபிகம் என்பது பல்

கடம்பம் என்பது வாலுளுவை

கடலி என்பது மூக்கிரட்டை

கடவுளம் என்பது தேவதாரம்

கடிகண்டு என்பது பூனைக்காலி

கடிச்சவாய் துடைச்சான் எருக்காகும்

கடிப்பகை என்பது கடுகு

கடில் என்பது மூக்கிரட்டை

கடு என்பது கடுக்காய் நஞ்சு

கடுகரம் என்பது கடுகுரோகணி

கண்டங்கனம் என்பது திப்பிலி

கண்டங்காலி என்பது கண்டங்கத்திரி

கண்டு என்பது கற்கண்டு

கணங்கம் என்பது சுண்ணாம்பு

கணா என்பது திப்பிலி

கத்திரிநாயகன் காட்டுச்சீரகம்

கந்தம் என்பது சாரணை

கயமலாகி என்பது வசம்பு

கயிரவம் என்பது வெள்ளாம்பல்

கரமை என்பது களாச் செடி

கரவதம் என்பது காகம்

கரவீரம் என்பது அலரி

கரிபோளம் என்பது நறும்பிசின்

கரியமால் என்பது துளசியாகும்

கருங்கஞ்சன் என்பது வெண்கலம்

கருங்கோலம் என்பது இரும்பு

கருஞ்சோளம் என்பது அகிற்கட்டை

கரும்பை என்பது நாயுருவி; காடி

கரும்பொன் என்பது இரும்பு

கருவிரி என்பது கம்பு

கருவை என்பது வரகுவைக்கோல்

கல்லாரம் என்பது மஞ்சள்

கல்லுருவி என்பது புல்லுருவி

கலவகம் என்பது காக்காய்

கலாயம் என்பது தயிர்

கலிகம் என்பது வாலுளுவை

கலித்துருமம் என்பது தானிக்காய்

கலியகம் என்பது வேப்பிலையரிசி

கலியாணம் என்பது பொன்

கலினை என்பது கொள்ளு

கலுளி என்பது காட்டெருமை

கலுனன் என்பது கருடன்

கவடி என்பதுபலகறை

கவடு என்பது கொம்பு

கவலை என்பது தினையரிசி

கவாடம் என்பது வெட்பாலை

கவி என்பது மந்தி

கவிரம் என்பது அலரி

கவிரோமம் என்பது பூனைக்காலி

கவிளம் என்பது மோர்

கவினி என்பது திருப்பாலை

கவுசிகம் என்பது குக்கில்

கவுதி என்பது கொன்னை

கவை என்பது எள்ளு

கழற்காய் என்பது கழற்சி

கழாயம் என்பது சிறுகீரை

கழாரம் என்பது பாக்குக்கழுது

கழுதை என்பது நஞ்சறுப்பான்

கழுனை என்பது மாதுளை

கள்ள என்பது சேற்றுமம்

களகசு என்பது வேதம், அதிவிடையம்

களகபுதம் என்பது வெள்ளி

களகம் என்பது எலி

களங்கி என்பது கழற்சி

களப்பன் என்பது பெருங்குயில்

களவன் என்பது தண்டு

கற்கடகசிங்கி என்பது கடுக்காய்ப்பூ

கற்கண்டம் என்பது அகில்

கற்பரம் என்பது துளசி

கறிமுள்ளி என்பது கண்டங்கத்திரி

கறிவேம்பு என்பது கறிவேப்பிலை

கன்றுரம் என்பது கற்பூரம்

கன்னம்பல் என்பது தகரம்

கன்னல் என்பது கரும்பு

கன்னல் கட்டி என்பது கற்கண்டு

கன்னி என்பது கற்றாழை

கனகம் என்பது பொன்

கனப்பிரகம் என்பது அரிதாரம்

கனம் என்பது களர்

கனரமம் என்பது கொன்றைக் கிழங்கு

## கா

காக்களி என்பது தேள் கொடுக்கு

காக்கிரட்டை என்பது கரும்புக் கச்சி

காக்கை என்பது இரசம்; சாயம்

காகம் என்பது கிறி

காகா என்பது நாணல்

காகிரத்தம் என்பது வறட்சுண்டி

காகோடி என்பது காஞ்சோறி

காகோலி என்பது கருஞ்சீரகம்

காசரை என்பது கஸ்தூரி

காசி என்பது சீரகம்

காசி ரத்தம் என்பது வறட்சுண்டி

காஞ்சனம் என்பது புங்கு

காஞ்சனி என்பது மஞ்சள்

காஞ்சிரம் என்பது கருஞ்சீரகம்

காஞ்சீரகம் என்பது காஞ்சோறி

காட்டணம் என்பது பெருங்குமிள்

காட்டுத்துவரை என்பது இரும்பிலி

காட்டுவெள்ளரி என்பது பேய்த்தும்மட்டிக்காய்

காட்டேரி என்பது கள்ளியாம்

காண்டகம் என்பது நிலவேம்பு

காணம் என்பது கொள்ளு

காத்திரம் என்பது பாம்பு

காத்தோட்டி என்பது ஆதொண்டை

காந்தளம் என்பது கலப்பைக் கிழங்கு

காந்தனம் என்பது நாய்வேளை

காப்பு என்பது திருநீறு

காபிரம் என்பது சாம்பிராணி

காம்போதி என்பது குண்டுமணி

காமரம் என்பது அகில்

காமலம் என்பது கழுதைலத்தி

காயத்திரி என்பது வெங்காயம்

காயாகூடகம் என்பது நிழலுலத்தல்

கார்பாசம் என்பது பருத்தி

கார்வல்லி என்பது பாகம்

காரணம் என்பது எருமை

காரி என்பது அவரை

காரிரத்தம் என்பது ஆடுதின்னாப்பாலை

காருணி என்பது வானம்பாடி

காலப்பூதம் என்பது கோழி

காலோமம் என்பது அகில்

காவ உசில் என்பது வாழை

காவகா என்பது சேங்கொட்டை

காவளை என்பது காட்டுமல்லிகை

காவி என்பது கருங்குவளை

காவிரம் என்பது அலரி

காவிளை என்பதுகொளிஞ்சி

காளகண்டம் என்பது குடில்

காளகம் என்பதுமருக்காரை

காளகன் என்பது கழுதை

காளம் என்பது எட்டி

கானக்குறத்தி என்பது முலைப்பால்

கானக்குறி என்பது குதிரை, மாமரம்

கானகம் என்பது பொன்

கானமுயல் என்பது காட்டுமல்லிகை

கானவல்லி என்பது குரங்கு

கானிகம் என்பது மணத்தக்காளி

கானித்தம் என்பது ஏலம்

கானியம் எனபது கக்கரிக்காய்

கானுசாரி என்பது நன்னாரிவேர்

## கி

கிகினி என்பது கருவிளங்காய்

கிஞ்சி என்பது வேம்பு

கிஞ்சுகம் என்பது முருக்கு

கிட்டியம் என்பது தீகிபம்

கிட்டிரம் என்பதுநெருஞ்சி

கிட்டினம் என்பது திரிபாலை

கிந்திகம் என்பது திப்பிலிமூலம்

கிரிளசன் என்பது இருசீரகம்

கிருமி என்பது புழு

கிருமி சத்துரு என்பது பூவரசம் விரை

கிளவறி என்பது தண்ணீர்விட்டான்

கிளை என்பது வாலுளுவை

கிறட்டி என்பது பிரண்டை

கிறத்தி என்பது நிலவேம்பு

கிறமுகம் என்பது கமுகு

கிறிச்சிறிடம் என்பது சாதிக்காய்

கிறிடம் என்பது உத்தாமணி

கிறிதம் என்பது நெய்

கிறிதவம் என்பது அகில்

கிறிமல்லி என்பது கடசப்பாலை

கிறிமிக்கினி என்பது வாலுளுவை

கிறிவிளவல்லி என்பது சிறுநன்னாரி

கிறிளசன் வல்லி என்பது சிறுநன்னாரி

கிறுகான் என்பது தசவாயுவிலொன்று

கிறுசன் என்பது மஞ்சள்

## கீ

கீசகன் என்பது மூங்கில்குறங்கு

கீடம் என்பது புழு

கீடமாறி என்பது சிறுபுள்ளடி

கீதம் என்பது மூங்கில்

## கு

குக்கில் என்பது மைகுடகி

குக்குறம் என்பது கோடசாலை

குகு என்பது களம்

குகுலா என்பது கடுகு ரோகணி

குகை என்பது ஆந்தை

குங்குமப்பூ என்பது சீமைக்குங்குமம்

குங்குரது என்பது குங்கிலியம்

குச்சம் என்பது குண்டுமணியாம்

குசடம் என்பது வெட்பாலை அரிசி

குசத்தின் பாதி என்பது சிறுபுள்ளடி

குசம் என்பது தொப்புள்

குசேச்சம் என்பது தாமரை

குஞ்சரம் என்பது அத்தியாகும்

குஞ்சரன் என்பது அரசு

குட்டிமம் என்பது துற்றம்

குட்டியிடித்தி என்பது சித்தரத்தை

குடக்குனி என்பது கருங்காலி

குடகம் என்பது உத்தாமணி

குடம்பம் என்புது இலுப்பை

குடம்பை என்பது முட்டை

குண்டலி என்பது இயங்குடல்

குண்ணம் என்பது பெருமருந்து

குணப்பாலம் என்பது அதிவிடையம்

குணேட்டம் என்பது அதிவிடையம்

குத்திரம் எனபது சணப்பு

குத்துக்கால் சமட்டி என்பது சிறியமிளகு

குதிரை என்பது மாமரம்

குதும்பகரந்தம் என்பது பம்பை

குந்தம் என்பது கள்ளு

கும்பகம் என்பது நாணல்

குபிகை என்பது எள்ளு, நல்லெண்ணெய்

குமஞ்சி என்பது ஆந்தையாகும்

குமம் என்பது கோஷ்டம்

குமரி என்பது கத்தாழை

குயம் என்பது முல்லை

குரகிலு என்பது குங்கிலியம்

குரணாசனம் என்பது வெங்காயம்

குரல் என்பது பாதிரி

குரவம் என்பது கோஷ்டம்

குரவர் என்பது பெரியோராகும்.

குருகு என்பது கோழி

குருகுதி என்பது தவசுமுருங்கை

குருசம் என்பது பெருங்காயம்

குருஞ்சி என்பது செம்முள்ளி

குருதி என்பது உதிரம்

குருது என்பது நெய்

குருந்தடி என்பது சித்தாமுட்டி

குரும்பு என்பது காடை

குருமலிபம் என்பது புதின்சோரு

குருவிச் சென்பது தேங்காய்; பாலைச்செடி

குருவிந்து என்பது முத்தக்காசு

குல்லையம் என்பது கருங்குவளை

குலகாணம் என்பது கயப்பு

குலகாபம் என்பத பேய்ப்புடல்

குலத்தம் என்பது கொள்ளு

குலவல்லி என்பது இலந்தை

குலவுக்கரசம் என்பது நாணல்

குலவேல் என்பது கஞ்சாங்கோரை

குலாங்காலி என்பது காவயம்புல்

குலிங்கம் என்பது சாதிலிங்கம்

குலோடி என்பது நாபி

குவிகம் என்பது இலுப்பை

குழிதி என்பது கிரகப்பூச்சி

குழிமீட்டான் என்பது நத்தைச்சூரி

குழியானை என்பது சவரிலோத்திரம்

குளப்பாலை என்பது ஊசிப்பாலை

குளம் என்பது கரும்பின் கட்டி

குளவி என்பது சதிர்க்கள்ளியாகும்

குளவிந்தம் என்பது மஞ்சள்

குளிதாமரை என்பது ஆகாயத்தாமரை

குன்றி என்பது குண்டுமணியாகும்.

## கூ

கூகைநீர் என்பது காட்டெருமைப்பால்

கூச்சம் என்பது தர்ப்பைப் புல்

கூச்சமம் என்பது நிலக்கடம்பு

கூச்சி என்பது சவரிலோத்திரம்

கூச்சிதம் என்பது கடம்பு

கூதணம் என்பது தூதுவளை

கூதாமருதும்பை என்பது கோப்பூண்டு

கூதைவங்கூழ் என்பது குளிர்காற்று

கூந்தல் என்பது கமுகுமயிர்

கூப்பல் என்பது குமிள்

கூற்கெவு என்பது கடுகு

கூர்மன் என்பது தசவாயுவிலொன்று

கூரம் என்பது ஆமை

கூலம் என்பது பகல்

கூவளை என்பது வில்வம்

கூவிரம் என்பது வில்வம்

கூவிளம் என்பது வில்வபத்திரி

கூழ்பாண்டம் என்பது சிறுபூசணிக்காய்

கூழை என்பது நல்லபாம்பு

கூறம் என்பது பாகல்

கூன்முகுது என்பது ஆமையோடு

கூனல் என்பது நத்தை

கூனலன் என்பது நத்தைச்சிங்கு

## கெ

கெகனாகம் என்பது அப்பிரேகம்

கெங்கராய் என்பது நிறமலர்

கெச்சம் என்பது முலை

கெச்சனா என்பது கையாந்தகரை

கெசகன்னி என்பது மோந்தை

கெசமுட்டி என்பது காஞ்சோறி

கெசவிரியம் என்பது பில்லம்பிசின்

கெந்தசடம் என்பது ஆமணக்கு

கெந்தணம் என்பது உந்திபிரி

கெந்தணம் என்பது கோடகசாலை

கெந்தபூரியம் என்பது நாய்வேளை

கெந்தவாசம் என்பது உந்தி

கெந்தனாகுலி என்பது சேவியம்

கெந்திகம் என்பது உந்திபிரி

கெந்துநூகுலியம் என்பது அரத்தை

கெம்பிரியம் என்பது நல்லம்பிசின்

கெருடநாயகன் என்பது சுடுகாட்டுமீட்டன்

கெவுரா என்பது கடுகு

## கே

கேக்கை என்பது தாழை

கேகயம் என்பது மகிழம்விரை

கேசம் என்பது திப்பிலி

கேசியம் என்பது தண்ணீர்மீட்டான்

கேணியம் என்பது கிணற்றுத்தண்ணீர்

கேதரம் என்பது மயிலடி

கேபாதி என்பது அரசு

கேயிகம் என்பது செங்கல்

கேளுச்சி என்பது சீந்தில்

கேனண்டம் என்பது நீர்ப்பட்சி

கேனவி என்பது செவிகெட்டது

## கை

கை என்பது யானை

கைந்து என்பது பொன்

கைதை என்பது எட்டி

கைதை என்பது தாழை

கையிகம் என்பது தண்ணீர்

கைவந்தம் என்பது வட்டக் கிலுகிலுப்பை

## கொ

கொக்காகை என்பது சங்கஞ்செடி

கொக்கு என்பது மாமரம்

கொங்காரம் என்பது குங்குமம்

கொங்கு என்பது தேன்

கொச்சிபேதம் என்பது சவரிலோத்திரம்

கொச்சை என்பது ஆடு

கொடப்பூச்சி என்பது காவட்டம்புல்

கொடாலி என்பது நாயுருவி

கொண்டகுணசம் என்பது எட்டி

கொண்டரசன் என்பது நஞ்சறுப்பான்வேர்

கொண்டேசன் என்பது திப்பிலி

கொண்டை என்பது கொன்னை

கொமட்டி என்பது சிதளை

கொழுஞ்சி என்பது காவேளை

கொற்கழுலி என்பது கஞ்சா

## கோ

கோ என்பது பசு

கோகண்டகம் என்பது நெருஞ்சில்

கோகி என்பது தும்பை

கோகிலம் என்பது நீர்முள்ளி, குயில்

கோகுத்தம் என்பது மல்லிகை

கோசம் என்பது முட்டை

கோசம்மம் என்பது முதிரத்தை

கோசாதி என்பது பிசுக்கு

கோடம் என்பது தெல்லிகாலி

கோடல் என்பது கரந்தை

கோடலி என்பது இந்தை; காட்டுக்கொடி

கோடிஞ்சி என்பது கோழி

கோடிரம் என்பது சதுரக்கள்ளி

கோடுறை என்பது சங்கன்செடி

கோடை என்பது கரந்தை

கோடைருவானை என்பது ஆவாரை

கோண்டம் என்பதுகுறிட சான்

கோண்டன் கிழங்கு என்பது முத்தக்காசு

கோணம் என்பது தாமரை

கோத்திரி என்பது முந்திரிகை

கோத்திரை என்பது வரகு ஆம்

கோதரம் என்பது சுக்கு

கோபதிண்டம் என்பது எட்டி

கோமார் என்பது நாவல்

கோலம் என்பது கருங்காலி

கோவரம் என்பது சந்தனம்

கோழை என்பது எலியாம்

கோள் என்பது நல்லெண்ணெய்

கோளகம் என்பது வால்மிளகு

கோளி என்பது அரசு

கோளில் என்பது அகத்தியாகும்

கோளுங்கம் என்பது மிளகு

கோளேசர் என்பது குங்குமப்பூ

## கௌ

கௌசிகம் என்பது கோட்டான்

## ச

சக்கசை என்பது பொன்னாங்கண்ணி

சக்கரை என்பது கரும்பின்கட்டி

சக்கான் என்பது சிறுகுறிஞ்சான்

சக்குமதி என்பது தக்கை

சகடம் என்பது ஊர்க்குருவி

சகடை என்பது கந்தம், வசம்பு

சகாதி என்பது பாம்புகொல்லி

சகாதேவி என்பது நெய்ச்சிட்டி

சகுட்டம் என்பது ஆடுதின்னாப்பாலை

சகுடம் என்பது செம்பு

சகுணம் என்பது கருணைக்கிழங்கு

சகுந்தம் என்பது பாக்கு

சங்கங்குப்பி என்பது பீநாறிச்சங்கு

சங்கநீதி என்பது வட்டக்கிலுப்பை

சங்கிபருகி என்பது கடுகுரோகணி

சங்கிபீடம் என்பது நாணல்கொடி

சங்குபாலாடை என்பது சங்கிலை

சசி என்பது கற்பூரமாகும்.

சசியம் என்பது நிலப்பனைக் கிழங்கு

சஞ்சீவி என்பது உயிர்க்கு மருந்து

சடபம் என்பது அருகங்கட்டை

சடாதரம் என்பது அருநெல்லி

சடாமஞ்சில் என்பது பெருங்கொன்றை

சடாலம் என்பது செண்பகப்பூ

சடிதீவு என்பது கச்சோலம்

சடினம் என்பது வசம்பு; சடைவேர்

சடைக்கி என்பது கீரிப்பூண்டு

சண்பகம் என்பது செண்பகப்பூ

சணகம் என்பது புளியாரை

சத்திக்குநாதன் என்பது கஞ்சாஇலை

சத்திரம் என்பது தும்பை

சதகம் என்பது தாணிக்காய்; சாதிக்காய்

சதபுஷ்பம் என்பது சதகுப்பை

சதம் என்பது நூறு

சதம்பத்திரி என்பது தாமரையிலை;தேற்றான்

சதனம் என்பது பாலையிலை

சதாப்பன் என்பது எருக்கு

சதாபலம் என்பது எலுமிச்சம்பழம்

சதாபுடம் என்பது எருக்கு

சந்தணம் என்பது சந்தனம்

சந்ததோரு என்பது நீர்முள்ளி

சந்திரம் என்பது பொன்

சந்திரேகம் என்பது கார்போகரிசி

சந்திலகம் என்பது சந்தனம்

சபலா என்பது திப்பிலி

சபினம் என்பது வசம்பு

சம்பழம் என்பது எலுமிச்சம்பழம்

சம்பாதின்கனி என்பது தேசிப்பழம்

சம்பிறி என்பது எலுமிச்சை;நேர்வாள்

சமங்கி என்பது வறட்சுண்டி

சமணம் என்பது புழுக்கொல்லி; வறட்சுண்டி

சமணம் என்பது ஊமத்தை

சமாது என்பது ஊமத்தை

சமி என்பது வள்ளிமரம்; தணக்குவாழை

சமுத்திரச்சோகி என்பது வட்டத்திருப்பி

சமுத்திரதோயம் என்பது முடக்கொற்றான்

சமுப்பவர் என்பது மேதை

சயபம் என்பது சர்க்கரை

சயிக்காய் என்பது அரசு

சரசுகாதி என்பது பெருமருந்து

சரியம் என்பது நன்னாரி

சருவாதம் என்பது திமிசு

சரோருகுகம் என்பது சங்கில்

சலம் என்பது மூத்திரம்

சல்லகி என்பது லவங்கம்

சல்லியம் என்பது பன்றி

சலனி என்பது திப்பிலி

சலாகம் என்பது கல்லுப்பு

சலோகம் என்பது குங்கிலியம்

சலிகம் என்பது விஷ்ணுகிரந்தி

சவுசெயம் என்பது முருக்கு

சவுட்டுமண் என்பது உழுமண்ணிலுப்புநீர்

சவுண்டை என்பது திப்பிலி;திரிபாலை

சற்பறச்சு என்பது சங்கங்குப்பி

சற்பாச்சி என்பது நாணல்

சன்மாலி என்பது இலவன்

சன்னி என்பது முட்டான்; மூஞ்சூறு

சன்னிநாயகம் என்பது கருஞ்சீரகம்

சாகம் என்பது சிறுதேக்கு

சாகாமூலி என்பது கொல்லங்கோவை

சாகிதுரு என்பது ஈச்சமரம்

சாகுணி என்பது சிறுகீரை

சாங்கம் என்பது குறிஞ்சாப்பூ

சாங்கெவுரி என்பது புளியிலை

சாட்டுவரம் என்பது நாவி

சாத்தவாகி என்பது தண்ணீர்மீட்டான்

சாத்திரவாதி என்பது தண்ணீர்மீட்டான்

சாதகம் என்பது வானம்பாடி

சாதரூபம் என்பது பொன்

சாதி என்பது பிரம்பு

சாதிப்பழம் என்பது சாதிக்காய்

சாதிபத்திரம் என்பது துராய்

சாதிபத்திரி என்பது வாசுராசி

சாதிரசம் என்பது நறும்பிசின்

சாதிரம் என்பது விஷ்ணுகிரந்தி

சாது என்பது தயிர்

சாதேவதம் என்பது தினல்நாவல்

சாந்தம் என்பது சந்தனம்

சாம்பம் என்பது ஆனைநெருஞ்சி

சாம்பலி என்பது நாவல்

சாம்போத்திரி என்பது தேங்காய்

சாமத்திரம் என்பது கருங்காலி

சாமம் என்பது நாவி

சாமரம் என்பது சிலதை

சாமி என்பது பொன்

சாயவேர் என்பது குணபூரல்

சாயிமரம் என்பது சிலதை

சாரகம் என்பது மந்தம்

சாரசம் என்பது நாரை

சாரசம் என்பது பாலடை

சாரம் என்பது ஆசகர்

சாரியம் என்பது நன்னாரிவேர்

சாரியம் என்பது எட்டிவேர்

சாருகம் என்பது சவலுப்பு

சாருகுலம் என்பது தண்ணீர்க் குரசம்

சாலகம் என்பது மாமரம்

சாலி என்பது நெல்லு

சாலினி என்பது பாக்கு

சாவணம் என்பது நாணல்

சாவதவம் என்பது மாமரம்

சாவுணம் என்பது சவுக்காரம்

சாளம் என்பது குந்தியம்

## சி

சிக்கடி என்பது ஆவாரை

சிக்குரு என்பது முருங்கை

சிகண்டி என்பது மயில்

சிகரி என்பது மலைவேம்பு

சிகரை என்பது எலியாகும்

சிங்கம் என்பது பெருமரம்; நன்னாரி

சிங்கவை தசநாடியி லொன்று

சிங்கி என்பது கடுக்காய்ப்பூ

சிங்கிகம் என்பது கருமுள்ளி

சிங்கிரீடம் என்பது பாலை

சிங்கிலி என்பது இண்டம்

சிங்கிவேர் என்பது சுக்கு

சிங்கிவை என்பது தசநாடியிலொன்று

சிசிரம் என்பது சந்தனம்

சித்தகத்தி என்பது செம்பை

சித்தமண் என்பது ஆமணக்கு

சித்தி என்பது எட்டியாகும்

சித்தி தங்கென்பது கடுகு

சித்திரம் என்பது சித்தாமணக்கு

சித்திலைச்செடி என்பது குண்டுமணி

சித்திவலையார் என்பது அம்மாம்பச்சரிசி

சித்துரோபம் என்பது நேர்வாளம்

சித்தோலை என்பது காட்டாமணக்கு

சிந்தம் என்பது புளியமரம்

சிந்து என்பது இருவாட்சி

சிந்துசாதி என்பது புளியமரம்

சிந்துரத்தம் என்பது உப்பு

சிந்துரம் சேங்கொட்டை புளியமரம்

சிந்துரமம் என்பது பொட்டிலுப்பு

சிந்துவாரம் என்பது நொச்சி

சிபமது என்பது சிறுபுள்ளடி

சிபலா என்பது பேய்ப்புடலே

சிபிட்டி என்பது பேய்த்துமட்டி

சிபிலம் என்பது அகிலம்

சிம்மை என்பது அவரை

சியத்தணி என்பது உத்தாமணி

சியத்துத்தம் என்பது கடுக்காய்

சியம் வெள்ளிலோத்திரம்

சிரிடம் என்பது திரிபாலை

சிரியத்தி என்பது உத்தாமணி

சில்லன என்பது தேகான்

சில்லி என்பது சிறுகீரை

சிலாபேதி என்பது நெருஞ்சி

சிலாமணா என்பது மனோசிலை

சிலிமுகம் என்பது முலைக்கண்

சிலியானை என்பது முடக்கொற்றான்

சிவந்திஎன்பது கடுக்காய்

சிவர் என்பது சிவனார்வேம்பு

சிவரர் வேசை என்பது செம்பருத்தி

சிவவந்திக் கற்பூரம் என்பது இரசகற்பூரம்

சிவனார் விந்து என்பது இரசம்

சிளாபர் என்பது கடுக்காய்

சிறியபுடம் என்பது வெண்தாமரை

சிறுகாரிடம் என்பது சாதிக்காய்

சிறுகாலி என்பது கந்தகம்

சிறுகாலி என்பது காரட்டம் பூ

சிறுகுலி என்பது புளியாரை

சிறுமூலம் என்பது திப்பிலி மூலம்

சிறுவழுதலை என்பது முள்ளிக்கத்தரி

சிறுவன் என்பது சிறுபுள்ளடி

சிறுவிடுகொள் என்பது காவாளை

சிறுவிறு என்பதுஅவுரி

சின்னாகுதம் என்பது சீந்தில்

சின்னியுறி என்பது வெள்ளைக்குண்டு மணி

சினாடிகர் என்பது மூக்கிரட்டை

சினாதாக்கு என்பது சாதிக்காய்

சினாவட்டம் என்பது வட்டத்திப்பிலி

## சீ

சீக்கிரியான் என்பது துரிஞ்சில்

சீகரம் என்பது பஞ்சலோகம்

சீகுரு என்பது முகங்கை

சீங்கம் என்பது இலந்தை

சீத்திரை என்பது அம்மாம்பச்சரிசி

சீதநற்பிரியம் என்பது விஷ்ணுகிரந்தி

சீதம் என்பது சந்தனம்

சீதளம் என்பது கொம்மட்டிமாதுளை

சீதாகா கோழி என்பது நற்சீரகம்

சீதை என்பது பொன்னாங்கண்ணி

சீயப்பட்டுக்காய் என்பது பாவட்டங்காய்

சீயம் என்பது கூகைநீறு

சீரிடம் என்பது வாகை

சீரியம் என்பது புளியமரம்

சீரியர் என்பது பெரியோர்

சீரு என்பது பலாசு

சீருளியம் என்பது தாம்பூரம்

சீவந்தி என்பது கடுக்காய்

சீவனி என்பது செவ்வல்லி

சீவனாகனி என்பது வெற்றிலை

சீவிகா என்பது சாதிக்காய்

சீனமிரீம் என்பது வால்மிளகு

சீனி என்பது சர்க்கரை

சீனிக்காரம் என்பது படிகாரம்

சீனிக்கிழங்கு என்பது பறங்கிப்பட்டை

## சு

சுக்கி என்பது சுண்டி

சுக்கிபம் என்பது நாட்டேலம்

சுக்கிலம் என்பது பாந்திரியம்

சுகத்திரம் என்பது வாகை

சுகம்பலம் என்பது பூனைக்காலி

சுச்சம் என்பது சுண்டியிலை

சுசிகம் என்பது புளியாரை

சுசிதம் என்பது பாலாகும்

சுசுமம் என்பது நெருஞ்சி

சுடர்காடை என்பது மின்னாம்பூச்சி

சுடுகாடுறையன் என்பது முடக்கொற்றான்

சுண்டி என்பது சுக்கு

சுண்டி என்பது தொட்டாற்சுருங்கி

சுண்டெலி என்பது மூஞ்சூறு

சுண்ணம் என்பது சுண்ணாம்பு

சுதாகி என்பது சதுரக்கள்ளி

சுதை என்பது அமுதத்தேன்

சுந்தரம் என்பது கண்டங்கத்திரி

சுந்தரி என்பது மூஞ்சூறு

சுபங்கே என்பது வறட்சுண்டி

சுபலி என்பது கள்ளு

சும்பகம் என்பது இருப்புச்சலங்கை

சும்மை என்பது ஆவாரை

சுமம் என்பது கடம்பு

சுரகை என்பது வசம்பு

சுரசா என்பது துளசி

சுரபவனி என்பது கள்ளு

சுரபுன்னை என்பது புன்னைமரம்

சுரம் என்பது விளாம்பிசின்

சுரமதில் என்பது சீந்தில்

சுரமலிகம் என்பது செருப்படை

சுரமி என்பது பிரமிப்பூண்டு

சுரிமுகத் தந்தம் என்பது ஆனைத்தந்தம்

சுருக்குச்சம் என்பது கதிர்க்கள்ளி

சுருத்துருமம் என்பது தேவதாரம்

சுரே என்பது கொற்றான்

சுரோணிதம் என்பது உதிரம்

சுல்லு என்பது வெள்ளி

சுவர்க்கம் பிடித்தான் என்பது ஆவாரை

சுவர்ணம் என்பது பொன்

சுவலை என்பது அரிசி

சுவாதகந்தி என்பது துளசி

சுவிகை என்பது கள்ளு

சுவேக்கனம் என்பது சவரிலோத்திரம்

சுவேதகாண்டம் என்பது வஞ்சிக்கொடி

சுவேத சாரம் என்பது நாவலப்புல்லு

சுவேதம் என்பது நாணல்

சுள்ளி என்பது நாகதாளி

சுனி என்பது புளியாரை

## சூ

சூக்குழம் என்பது சிலந்திநாயகம்

சூடிசே என்பது கள்ளு

சூத்திரம் என்பது சாத்திரநூல்

சூது என்பது ஓரிலைத்தாமரை

சூர்மிளகு என்பது வால்மிளகு

சூரம் என்பது எருக்கமரமாம்

சூரம் என்பது கடலை

சூரல் என்பது பிரம்பு

சூரளம் என்பது கரணை

சூரன் என்பது மூஞ்சூறு

சூரியன் என்பது எருக்கு

சூருமம் என்பது மாந்தைப்புல்

சூலினி என்பது வெற்றிலை

சூறை என்பது தூதுவளை

சூனம் என்பது மருள்

## செ

செகரிகம் என்பது நாயுருவி

செங்காரம் என்பது வெண்காரம்

செங்காலி என்பது செந்நெல்

செங்குமுதம் என்பது அபலம்

செங்குவளை என்பது செங்கழுநீர்

செங்குறிச்சி என்பது குறிஞ்சா

செங்கொடி என்பது சேகம்

செதுக்கு என்பது மந்திரம்

செந்தாது என்பது பொன்

செந்து என்பது பெருங்காயம்

செந்தொட்டி என்பது சிறுகாஞ்சுரை

செந்நீர் என்பது உதிரம்

செப்பு என்பது தாமிரம்

செம்பாலை என்பது ஆவாரை

செம்பு என்பது நாவல்

செம்புளிச்சை என்பது செம்மணத்தை

செம்மரம் என்பது அழிஞ்சில்

செமு என்பது அட்டை

செய்கை என்பது உப்பு

செயலோகம் என்பது செந்தூரம்

செரிட்டம் என்பது சந்தனம்

செருந்தி என்பது மணத்தக்காளி

செல்லங்கொட்டை என்பது வாளம்

செலம் என்பது வெட்டிவேர்

செவ்வலனார் என்பது ஆம்பல்

செவியம் என்பது மிளகுக்கொடி

செனாடிகர் என்பது மூக்கிரட்டை

## சே

சேகறி என்பது நாயுருவி

சேகு என்பது முலைப்பால்

சேந்து என்பது அசோகு

சேயபற்பம் என்பது கெவுரி

சேயா என்பது கடுக்காய்

சேர்விளங்கம் என்பது அமுக்குரா

சேரா என்பது கள்ளு

சேரு என்பது கள்ளு

சேலதம் என்பது சந்தனம்

சேலை என்பது அசோகு

சேவலம் என்பது பாசி

சேவுகன் என்பது பூண்டு, சித்தாமுட்டி

சேனம் என்பது மருந்து

சேனாமரம் என்பது அழிஞ்சி

## சொ

சொர்ணம் என்பது கரும்பு

சொல் என்பது கள்ளு

சொன்னவை என்பது சோளம்

## சோ

சோகினை என்பது சோகு; பேய்

சோங்கம் என்பது கோங்கு

சோசனம் என்பது உள்ளி

சோத்தியம் என்பது வாலுளுவை

சோதி என்பது வெளிச்சம்

சோநாகம் என்பது பெருவாகை

சோபாகை என்பது அடம்பன்

சோமம் என்பது கள்ளு

சோமனுப்பு என்பது இந்துப்பு

சோனை என்பது மாமழை

## ஞு

ஞுண்டு என்பது நண்டு

ஞுமலி என்பது மயில்

## ஞா

ஞாலமாது என்பது பொன்னாவாரை

ஞாளி என்பது கள்ளு

## ஞொ

ஞொயாய் என்பது பெருமருந்து

## ட

டங்கன் என்பது வெண்காரம்

## த

தக்காரி என்பது தழுதாழை

தக்கிரம் என்பது தயிர்

தகரு என்பது பலாசு

தகிலிமா என்பது சேங்கொட்டை

தச்சன் என்பது மிளகு

தசமூலம் என்பது சித்தாமுட்டி, பேராமுட்டி, பெருவாகை, கண்டங்கத்திரி, கூவளை, பெருங்குமிள், வழுதலை, நெருஞ்சி.

தட்டான் என்பது புடலன்

தட்டி என்பது கோஷ்டம்

தட்டிலம் என்பது சதகுப்பை

தட்டை என்பது மூங்கில்

தண்டுலகம் என்பது அரிசி

தணல்லியம் என்பது தணக்கீரை

தணியல் என்பது கள்ளு

தத்தைக்கிளி என்பது ஊரல்

தம்மலை என்பது இலந்தை

தமர் என்பது அரக்கு

தமரக்காவம் என்பது பிசுக்கு

தமரொலி என்பது கிலுகிலுப்பை

தமனகம் என்பது மருக்கொழுந்து

தமனீ என்பது வன்னிமரம்

தமனீயம் என்பது பொன்

தளமயம் என்பது அரிதாரம்

தயிலப்பிதம் என்பது அத்திப்பிசின்

தரக்கதி என்பது அத்தி

தரச்சி என்பது ஒட்டபூவம்

தரடி என்பது சத்திசாரணை

தரடிகம் என்பது மாதுளை

தரளம் என்பது முத்து

தரிச்சம் என்பது கண்டி

தலத்தாது என்பது நிலப்பனை

தலம்புடம் என்பது பொருநிலை

தலைக்குருளி என்பது தலைச்சுருளிவள்ளி

தலைச்சுருளி என்பது சீந்தில்

தலைச்சுருளிவள்ளி என்பது பெருவள்ளிக் கிழங்கு

தலைவிரிச்சான் என்பது சாரணை

தவச்சோறி என்பது கூகைநீரு

தவுச்செயம் என்பது முருக்கு

தழுதாழை என்பது வாதமடக்கி

தளயம் என்பது முல்லை

தற்சோளம் என்பது சிறுநாகப்பூவு

தற்பதி தாலம் என்பது கமுகு

தறிச்சன் என்பது எருக்கிலை

தனக்கு என்பது உளிஞ்சி

## தா

தாத்திரி என்பது நெல்லியாம்

தாதுகி என்பது செங்கல்

தாதுகந்தம் என்பது கந்தகம்

தாம்பூரம் என்பது மஞ்சிட்டி

தாம்பூலம் என்பது இலைக்கள்ளி

தாமம் என்பது கொன்னை

தாமரை என்பது கமலம்

தாமலைக்கா என்பது கீழாநெல்லி

தாமிரம் என்பது செம்பு

தாய்சத்து என்பது பீதரோகணி

தாயைக் கொன்றான் என்பது வாழை

தார்பீடம் என்பது மரமஞ்சள்

தாரம் என்பது தேவதாரம்

தாலபத்திரி என்பது மரமஞ்சள்

தாலபேதம் என்பது ஆவாரை

தாலுசன்னி என்பதுவெள்ளைக்காக்கணம்

தாளகம் என்பது பொன்னரிதாரம்

தாளி என்பது சிவத்தை யாகும்

தாளியம் என்பது வில்வப்பத்திரி

## தி

திக்கச்சம் என்பது ஓமம்

திக்கரை என்பது முருக்கு

திகலைச்சாறு என்பது எலுமிச்சஞ்சாறு

திகளு என்பது கொடிவேலி

திகாரி என்பது மூங்கில்

திசாயம் என்பது குக்கில்

திட்டன் என்பது கஞ்சாங்கோரை

திட்டி என்பது தினை

தித்தகம் என்பது மலைவேம்பு

தித்தியம் என்பது அரத்தை

தித்தேகி என்பது பற்படாகம்

திந்திரிச்சி என்பது நாணல்

திந்துருனி என்பது புளியமரம்

திப்பம் என்பது திப்பிலி

திபசு என்பது வேங்கைமரம்

தியாசெயம் என்பது மரமஞ்சள்

தியாமம் என்பது இருவேலி

திரங்கணல் என்பது மிளகு

திரண்பதி என்பது வாழை

திரந்திசம் என்பது திப்பிலிமூலம்

திரமம் என்பது சாதிலிங்கம்

திரவந்தி என்பது காட்டாமணக்கு

திரள்கோரை என்பது கஞ்சாங்கோரை

திரளாசம் என்பது நிலப்பனை

திரிகடுகு என்பது சுக்கு,மிளகு,கடுகு

திரிகண்டம் என்பது நெருஞ்சில்

திரிகை என்பது முந்திரிகை

திரிசாதிலம் என்பது ஏலம், லவங்கம், லவங்கப்பட்

திரிசூலி என்பது கத்தாழை

திரிடி என்பது கள்ளி

திரிபாலாதி என்பது தானி, நெல்லிக்காய், கடுக்கா

திரிபுரத்தான் என்பது குப்பைமேனி

திரிபுரமெரித்தான் என்பது சிவனார்வேம்பு

திரிமனாய் என்பது பம்மந்துராய்

திரிலவங்கம் என்பது அகில், செண்பகப்பூ, கிராம்பு

திருத்துளா என்பது துளசி

திருநாரிப்பாலை என்பது நன்னாரி

திருப்படி என்பது ஏலம்

திருமரம் என்பது அரசு

திருமலர் என்பது தாமரை

திருமாலுந்தி என்பது தாமரை

திருவடம்பிசின் என்பது வாளிகம்

திருவம் என்பது குதிரைலத்தி

திருவளம் என்பது துராய்

திரையல் என்பது வெற்றிலை

திலகம் என்பது மஞ்சாடி

திலோர் என்பது எள்ளுஎண்ணெய்

## தீ

தீர்த்தாருகு என்பது நிலப்பனை

தீர்மூலம் என்பது முடக்கொற்றான்

## து

துகளசம் என்பது குந்திரிகம்

துகிர் என்பது பவளம்

துங்கரீகம் என்பது காவிக்கல்

துட்டி என்பது ஏலம்

துடக்கருப்பன் என்பது முடக்கொற்றான்

துடவை என்பது மயில்

துடி என்பது ஏலம்

துடியாஞ்சி என்பது இசங்கி

துண்டம் என்பது சாரைப்பாம்பு

துணபம் என்பது பினை

துணை என்பது மூங்கில்

துத்தம் என்பது பாசாணத்தின் கலசம்

துத்தி என்பது கற்பம்

துத்தியம் என்பது சவரிலோத்திரம்

துப்பு என்பது குருவியெச்சம்

துபாகம் என்பது நெய்

தும்பசர் என்பது தும்பையாம்

தும்பரம் என்பது அத்தி

தும்பாரகம் என்பது செம்பரத்தை

தும்பால் என்பது சூரை

தும்பி என்பது மின்னாம்பூச்சி: யானை

துரிஞ்சில் என்பது அரப்புச் செடி

துருக்கம் என்பது குங்குமப்பூ

துருகாரம் என்பது கஸ்தூரியாம்

துருப்பவானி என்பது காட்டாமணக்கு

துரேணம் என்பது காக்கை

துரோணம் என்பது தும்பை

துவர்க்கா என்பது பாக்கு

துவலம் என்பது பவளம்

துவாசிகை என்பது கூகைநீரு

துளவு என்பது துளசி

துளாய் என்பது துளசி

துற்பரிசம் என்பது சிறுகாஞ்சோறி

## தூ

தூக்கு என்பது தூக்கணாங்குருவி

தூகை என்பது பாளை

தூசி என்பது கலை

தூசிகம் என்பது புளியாரை

தூணியங்கம் என்பது அத்திப்பிசின்

தூதளை என்பது தூதுவளை

தூம்பு என்பது ஓமம்

தூர்மம் என்பது தேள்கொடுக்கி

தூருவை என்பது அரக்கு

தூரேமம் என்பது துராய்

தூலம் என்பது நீர்முள்ளி

## தெ

தெந்தி என்பது நேர்வாளம்

## தே

தேகணிஎன்பது மஞ்சள்

தேக்ம் என்பது கமுகு

தேசநாடி [1] என்பது திசநாடி, தசநாடி

(அவை)

---

1. தசநாடி என்பது தேசநாடி என்றும், திசநாடி என்றும் கூறப்படும். இங்கு 9 நாடிகளே கூறப்பட்டுள.

இடையின் கலை,

சுழிமுனை,

சிங்கு வை,

புருடன்,

காந்தாரி,

அசனி,

அலம்புலி,

சங்கினி,

குருல்

ஆகநாடி 10

தேசமூலம் என்பது திசைமூலம், தசமூலம்

(அவை)

வாகை,

முல்லை,

சித்தாமுட்டி,

பேராமுட்டி,

கண்டங்கத்திரி,

குமிள்,

குவளை என்பது

தேசலம் என்பது தேமா.

தேசவாய்வு[2] என்பது ‘திசவாய்வு’, ‘தசவாய்வு’

(அவை)

பிராணன்,

அபானன்,

உதானன்,

சமானன்,

நாகன்,

கூர்மன்,

தனஞ்செயன்,

வியாமன்

ஆகவாய்வு 10

தேசாபுரம் என்பது கண்டதிப்பிலி

தேசான் என்பது சுக்கு

தேசி என்பது எலுமிச்சு, குதிரை

தேசிகம் என்பது பொன்.

தேவகந்தி என்பது சாம்பிராணி

தேவதிஷ்டரா என்பது தேள்கொடுக்கு

தேவமரம் என்பது மாமரம்

தேறல் என்பது கள்ளு

தேறுகால் என்பது தேன்

தேன்கட்டை என்பது ஆளனெருஞ்சி

தேனி என்பது குளவிக்கூண்டு

## தை

தை என்பது நல்லவேளை

---

2. இங்கு 8 வாய்வுகளே ஓலையில் எழுதப்பட்டுள்ளன.

## தொ

தொகல் என்பது மாந்தப்புல்

தொட்டால் என்பது பெருங்குறிஞ்சி

தொட்டி என்பது காஞ்சோறி

தொண்டி என்பது கள்ளு

தொண்டை என்பது கோவை

தொப்பி என்பது கள்ளு

தொன்மரம் என்பது ஆல்

## தோ

தோகை என்பது மயில்

தோசை என்பது அப்பம்

தோட்டி என்பது நெல்லு

தோடகம் என்பது தாமரை

தோண்டல் என்பது முதலை

தோண்டி என்பது கரந்தை

தோதகி என்பது சவுட்டுமண்

தோரை என்பது மூங்கிலரிசி

தோளி என்பது அரக்கு

தோஷம் என்பது குற்றம்

## ந

நக்கவரி என்பது வறட்சுண்டி

நக்கிரா என்பது தேள்கொடுக்கு

நகனு ரோணம் என்பது தும்பை

நகனோகரம் என்பது மஞ்சிட்டி

நகிதம் என்பது இண்டு

நகுர்மம் என்பது புங்கு

நங்கந்தம் என்பது அரிதாரம்

நச்சு என்பது விஷம்

நச்சோலம் என்பது நாவி

நஞ்சறுப்பான் என்பது கொச்சப்பாலை

நடுவகுத்தான் என்பது மூக்கறுத்தான்

நண்டு கண்ணு என்பது சுகினி: எலுமிச்சு

நண்பாலம் என்பது வெட்பாலை

நணந்தம் என்பது புங்கு

நத்துளி என்பது அத்திப்பால்

நத்தை என்பது கொற்றான்

நத்தைச்சூரி என்பது தோளடுபூண்டு

நந்தாமணி என்பது தாமணி

நந்தியாவட்டம் என்பது வலம்புரி

நம்பெருமான் என்பது வித்துரசம்

நமக்காறி என்பது புழுக்கொல்லி

நல்லசாரம் என்பது அத்திப்பிசின்

நவநீதி என்பது வெண்ணெய்

நவளுகம் என்பது ஓமம்

நறவு என்பது கள்ளு, மயிற்கொன்றை

நறுவிளா என்பது நிலவிளா

நறும்பருப்பு என்பது கழற்சி

நனை என்பது கள்ளு

நனையாவறட்டி என்பது ஆகாயத்தாமரை

## நா

நாககந்தி என்பது வளம்

நாககேசரம் என்பது சிறுநாகப்பூ

நாகம் என்பது துத்தநாகம்

நாகரம் என்பது கஞ்சாங்கோரை

நாகவல்லி என்பது ஓரிலைத்தாமரை

நாகரிசம் என்பது தவசிமுருங்கை

நாகனம் என்பது சங்கு

நாகனவல்லி என்பது வெற்றிலை

நாகனி என்பது வஞ்சிக்கொடி

நாகுவாளி என்பது நாத்தாளி

நாத்தம் என்பது வசம்பு

நாதயம் என்பது இந்துப்பு

நாபிசம் என்பது தொப்புள்

நாமவற்றம் என்பது பெருநெருஞ்சில்

## பி

பிக்கம் என்பது பாறுவேலி

பிகன் என்பது வசளை

பித்தம் என்பது பிரம்பு: நாயுருவி

பித்தரோசனம் என்பது பூவரசு

பிரக்கதம் என்பது வலம்புரிக்காய்

பிரக்கந்தம் என்பது ஆடுதின்னாப்பாலை

பிரிகரிகம் என்பது அகில்

பிரகாகி என்பது நீர்முள்ளி

பிரகுத்தம் என்பது மான்கொம்பு

பிரசாதனம் என்பது கொக்கு

பிரதனம் என்பது கடுக்காய்

பிரம்மாவித்து என்பது வெள்ளைப்பாசாணம்

பிரியகம் என்பது வேங்கைமரம்

பில்லகத்தி என்பது நெருஞ்சி

பிலவங்கம் என்பது தவளை:தேரை

பிழி என்பது கள்ளு

பின்கலை என்பது தசநாடியிலொன்று

பின்மூலம் என்பது சித்தாமுட்டி

## பீ

பீதசாரம் என்பது வேங்கை

பீதம் என்பது அரிதாரம்

பீதமுகம் என்பது கொம்பட்டி மாதுளை

பீதவண்ணம் என்பது கடுக்காய்

பீநக்கி என்பது நாக்குப்பூச்சி

பீர்க்கு என்பது பேய்ப்பீர்க்கு

பீரு என்பது புருவம்

பீருகா என்பது பீதரோகணி

பீரும்பீக்கு என்பது பூவரசு

பீலி என்பது நத்தை ஓடு: மயிலிறகு

பீலிகை என்பது எறும்பு

பீழ் என்பது பீனாக்கிரம்

## பு

புக்கு என்பது ஈராய்ப்பாலை

புகழ்ப்பு என்பது பொன்னாவரை

புகழ்பகழ் என்பது மூக்குரத்தை

புட்பாகம் என்பது மூக்குரத்தை

புண்டர் என்பது தாமரை

புண்டரிகம் என்பது தாமரை

புண்ணியகாரம் என்பது குங்கிலியம்

புண்ணீர் என்பது உதிரம்

புத்தாரி என்பதுஅருநெல்லி

புத்தாழி என்பது பானை

புத்திரி என்பது கீழாநெல்லி

புத்துறுணி என்பது எட்டி

புயமகரம் என்பது சற்பம்

புரி என்பது சங்கு

புரிசை என்பது மயில்

புருடம் என்பது புன்னை

புருடன் என்பது தசநாடியிலொன்று

புல்லகண்டம் என்பது சர்க்கரை
புல்லமை என்பது கொஞ்சப்புத்தி
புலிங்கம் என்பது ஊர்க்குருவி
புலிதுடங்கி என்பது துடறி
புலிநடலை என்பது ஆனைதடிப்பூ
புழுக்கொல்லி என்பது ஆடுதின்னாப்பாலை
புறப்பி என்பது பானை
புறப்பொதி என்பது பூவரசம்
புறவம் என்பது புறா
புன்முருக்கு என்பது பலாசு
புனர்போகம் என்பது கடுக்காய்
புனல் பாகல் என்பது வாலுளுவை
புனிதாமரை என்பது உள்ளான்
புனை என்பது மூங்கில்

## பூ

பூகரம் என்பது கமுகு: பிஞ்சு
பூத்திரு என்பது நாய்வேளை
பூதகரப்பான் என்பது பீநாறிமரம்
பூதமுஷ்டை என்பது வட்டத்திருப்பி
பூதவாசம் என்பது தானிமரம்
பூதவிருக்கம் என்பது பெருவாகை
பூதவிருட்சம் என்பது பீநாறிமரம்
பூதனம் என்பது கடுக்காய்

பூதாங்குசம் என்பது பேய்: பிரம்படி

பூதாத்திரி என்பது கீழாநெல்லி

பூதிகம் என்பது சாதிக்காய்

பூதிமம் என்பது தூதுவளை

பூந்தனர் என்பது புன்முருக்கு

பூநாகம் என்பது நாக்குப்பூச்சி

பூமகர் என்பது கையாந்தகரை

பூமலேசனம் என்பது சங்கங்குப்பி

பூமிச்சர்க்கரை என்பது சீந்திச் சர்க்கரை

பூமிநாகம் என்பது நாக்குப்பூச்சி

பூரணி என்பது லவங்கம்

பூரி என்பது அயில்

பூவன்பழம் என்பது நெய்க்கொட்டான்பழம்

பூவைகிளி என்பது புறா

பூழ்க்கரம் என்பது நாயுருவி

பூளிபலம் என்பது பூசனிக்காய்

பூனி என்பது அகில்

பூனை என்பது இலவம்பிசின்

பூளைவணங்கி என்பது நாயுருவி

## பெ

பெதரிகளம் என்பது எட்டி

பெபாதனம் என்பது வேங்கைமரம்

பெயதி என்பது இரதம்

பெருமருந்து என்பது ஈசுரமூலி

பெருவிருக்கோன் என்பது காவாளை

பெலிகாரம் என்பது வெண்காரம்

## பே

பேய்ச்சீந்தில் என்பது ஆகாயக்கருடன்

பேய்த்தும்மட்டி என்பது பேய்க்கும்மட்டி

பேய்ப்பிடி என்பது பூதாங்குசம்

பேர்க்காசி என்பது கருமுள்ளி

பேரரத்தை என்பது தும்பராஷ்டகம்

பேனம் என்பது கடல்நுரை

## பை

பைங்கூழ் என்பது காவட்டம்புல்

பைசு என்பது பால்

பைந்தினை என்பது தினையரிசி

## பொ

பொக்கம் என்பது விஷமுட்டி

பொக்கினத்துப்பி என்பது பெருங்கிழங்கு

பொகில் என்பது மொக்குப்பூ

பொருட்டு என்பது தாமரைக் கொட்டை

பொங்கம் என்பது இலவு

பொங்களி என்பது நெல்லு

பொசி என்பது துத்தம்

பொட்டிலுப்பு என்பது வெடியுப்பு

பொடி என்பது நீரு

பொதி என்பது ஆரை

பொதும்பம் என்பது ஆச்செறிவு

பொம்மல் என்பது சோறு

பொரிகாரம் என்பது வெண்காரம்

பொரிமலம் என்பது புங்கு

பொரியரை என்பது சிறுபுள்ளடி

பொரும்பி என்பது ஆவாரை

பொருமல் என்பது நாடி

பொறி என்பது இந்திரியம்

பொன்முசுட்டை என்பது வட்டத்திருப்பி

## போ

போசனம் என்பது உண்டி

போணம் என்பது நிலக்கடம்பு

போத்திரி என்பது பன்றி

போது என்பது தாமரை

போந்தை என்பது பானை

போலவங்கம் என்பது பவழக்கல்

போனம் என்பது சோறு

## ம

மகந்தரம் என்பது பகனிக்கள்ளு

மகம் என்பது சுறாமீன்

மகம்பு என்பது பெருஞ்சீரகம்

மகளை என்பது கொன்னை

மகாசவேத்தம் என்பது வாலுளுவை

மகாதலம் என்பது அரிதாரம்

மகாநிலம் என்பது கையாந்தகரை

மகாபலம் என்பது தூதுவளை

மகாபுருஷம் என்பது மேதை

மகாமேதை என்பது கூகைநீரு

மகாவிருஷ்சம் என்பது சதுரக்கள்ளி

மச்சி என்பது பூனைக்காலி

மச்சியாச்சி என்பது பொன்னாங்கண்ணி

மஞ்சகம் என்பது கொக்கு

மஞ்சம் என்பது கொம்மட்டி மாதுளை

மஞ்சரி என்பது கூவிளை

மஞ்சளி என்பது உத்தாமணி

மஞ்சாக்குருவி என்பது தேசிதப்பழம்

மஞ்சிகம் என்பது தாளி

மஞ்சிட்டம் என்பது மஞ்சட்டி

மஞ்சிட்டிநுணா என்பதுவேரின்பட்டை

மஞ்சுரம் என்பது கடலை

மட்டு என்பது கட்டு

மடங்கல் என்பது அத்தி

மடல் என்பது வாழை

மடில் என்பது தாழை

மண்சுதை என்பது சுண்ணம்

மண்டகை என்பது அப்பம்

மண்டம் என்பது ஆமணக்கு

மண்டலம் என்பது வாசம்

மண்டலி என்பது குதிரை:கொடித்தேன்

மண்டலிசிதம் என்பது வேர்வை: கடுகு:தேன்

மண்டலீசர் என்பது கடித்தால் வருத்தப்படுத்தும்

மண்டிதம் என்பது சிறுகீரை

மண்டூகம் என்பது தவளை

மண்டூரம் என்பது கிட்டம்

மணம் என்பது வாசம்: கலியாணம்

மணலி என்பது நாய்ப்பூளை

மணவு என்பது பலகறை

மத்தகம் என்பது நெற்றி

மத்தியம் என்பது ஓடே

மதங்கைஎன்பது அத்தி

மதசரணை என்பது தண்ணீர் மீட்டான்

மதபாணி என்பது வட்டத்திருப்பி

மதலை என்பது பிள்ளை

மதளம் என்பது மருக்காரை

மதளை வையம் என்பது காஞ்சோறி

மதனலிங்கம் என்பது அமுக்குரா

மதாகம் என்பது இலுப்பை

மதிமச்சம் என்பது வாலுளுவை

மதிமரசம்என்பது சந்திரன்

மது என்பது தேன்

மதுகம் என்பது இலுப்பை

மதுசநாசம் என்பது முந்திரிகை

மதுபானம் என்பது சாராயம்

மதுர்பாகம் என்பது மூக்கு

மதுரசம் என்பதுபேரீத்து

மதுரம் என்பது அதிமதுரம்

மதுரை என்பது களம்

மந்தாசம் என்பது செம்மந்தி: குரங்கு

மந்தாசு என்பது வெள்ளெருக்கு: ஊமத்தை

மந்திரம் என்பது சாராயம்

மமுத்தை என்பது ஆதளை

மமைகுறிஞ்சி என்பது பெருங்குறிஞ்சி

மயிடம் என்பது பாலவம் பிசின்

மயிரகம் என்பது நாயுருவி

மயிரகம்பி என்பது ஊமத்தங்காய்

மயிரை என்பது தக்கோலம்

மயிலடி என்பது எருமை

மயிலிகம் என்பது மருளூமத்தை

மயிலேபம் என்பது தக்கோலம்

மயிலை என்பது இருவாட்சி

மயூரகம் என்பது ஊமத்தை

மயேன் என்பது அரேணுகம்

மராமரம் என்பது கடம்பு

மரிச்சன் என்பது மாமரம்

மருகு என்பது மருக்கொழுந்து

மருங்கு என்பது இடையம்

மருத்து என்பது காற்று

மருது என்பதுமருதன்மரம்

மருந்து என்பது அமிர்தம்

மருமம் என்பது மார்பு

மருவாகி என்பது பாலை

மருளூமத்தை என்பது பொட்டிலுப்பு

மரை என்பது தாமரை

மலதிரம் என்பது கஞ்சாங்கோரை

மலம் என்பது கஷ்டம்

மலம்புரு என்பது கார்போகரிசி

மலர் என்பது பூவு

மலாகு என்பது மலையாமணக்கு

மலரவம் என்பது பிண்ணாக்கு

மலிசம் என்பது அரசு

மலைக்குண்டுவேர் என்பது அதிமதுரம்

மலைதாங்கி என்பது வட்டத்திருப்பி

மலைமுனி என்பது அகத்தி

மலையரசம் என்பது சந்தனம்

மலையார் என்பது சந்தனம்

மலைவசப்பஞ்சம் என்பது அகில்: கோஷ்டம்

மலைவசம்பு என்பது மிளகு

மறலி என்பது அகில், தக்கோலம், குங்குமப்பூ

மறவி என்பது பகனிக்கள்ளு

மறளி என்பது எமன்

மறி என்பது ஆடு

மன்றல் என்பது வாசம்

## மா

மாகத்தீ என்பது திப்பிலி

மாச்சி என்பது கருடன்

மாசு என்பது சுட்டம்

மாசுணம் என்பது சற்பம்

மாடம் என்பது உளுந்து

மாடு என்பது பொகளம்

மாதவம் என்பது பகனிக்கள்ளு

மாதவி என்பது தவசிமுருங்கை

மாதி என்பது மாமரம்

மாதிரி என்பதுஅதிவிடையம்

மாதுங்கம் என்பது கும்மட்டிமாதுளை

மாதுலம் என்பது பொன்னூமத்தை

மாந்தம் என்பது காவட்டம்புல்

மாந்தி என்பது மாமரம்

மாந்திரம் என்பது தும்பி

மாம்பிரம் என்பது சிறுதேக்கு

மாயபுரி என்பது பித்தளை

மாயம் என்பது புளியம்பிராணி

மாயன் வித்து என்பது வெள்ளரிவிரை

மாயோன்பூடு என்பது துளசி

மார்க்கம் என்பது கையாந்தகரை

மாரகம் என்பது மருக்காரை

மாரம் என்பது கோடகசாலை

மாருதம் என்பது காற்றும் வாய்வும்

மால் என்பது பெருமை

மால்தோடை என்பது துளசி

மாலதி என்பது செண்பகப்பூ

மாலதிரம் என்பது பச்சை

மாலம் என்பது குங்குமப்பூ

மாலி என்பது கள்ளு

மாவிருட்சம் என்பது சதுரக்கள்ளி

மாவிலந்தம் என்பது விடத்தாரை

மாவிளம் என்பது கூவிளம்

மாளிமந்தம் என்பது இந்துப்பு

மாளை என்பது புளியம்பிராணி

மானதம் என்பது கஸ்தூரியாகும்

மானமர் என்பது கள்ளி

## மி

மிகுசு என்பது வண்டு

மிகுந்தபணம் என்பது தண்ணீர்மீட்டான்

மிகுமணம் என்பது விரிந்தபூ

மிடாச்சிகம் என்பது குக்கில்

மிதவை என்பது சோறுஉள் சதை

மிராதம் என்பது தடக்குள்ளி

மிரிசம் என்பது மிளகு

மிரியல் என்பது சேவியம்: மிளகுச்செடி

மிரிஷபத்திரி என்பது வறட்சுண்டி

மிருசகம் என்பது எலுமிச்சம்பழம்

மிருத்திகம் என்பது முந்திரி

மிருத்தியல் என்பது தூதுவளை

மிருது என்பது நெல்லிக்காய்

மிருதுமம் என்பது விலாமிச்சு

மிலச்சம் என்பது சாதிலிங்கம்

மிலாங்கலி என்பது கரந்தை

மிளகுதக்காளி என்பது கைத்தக்காளி

## மீ

மீனங்கு என்பது விரியன்,

மண்வண்ணம்,

உப்பிலியாகும்

மீனம் என்பது மீன்கவுச்சு

## மு

முகம் என்பது இந்திரகோபம்

முகிழ் என்பது மொக்கு

முச்சிரம் என்பது பெருஞ்சீரகம்

முச்சுடர் என்பது பருத்தி

முசல் என்பது ஓந்தி

முசலி என்பது உடும்பு

முசாதகம் என்பது வெண்டாமரை

முட்டி என்பது எட்டி

முடங்கல் என்பது தாழை

முடங்குளை என்பது சிங்கம்

முடிமேல் முடி என்பது செருந்தி

முடை என்பது புலால்

முண்டகம் என்பது பகனி;நீர்முள்ளி; கருப்புக்கட்டி

முத்தக்காசு என்பது கோரைக் கிழங்கு

முத்தம் என்பது கோரைக் கிழங்கு

முத்திரம் என்பது லவங்கப்பட்டை

முத்திளம் என்பது கத்தரிக்காய்

முத்துடக்கன் என்பது நிலக்கடம்பு

முதை என்பது சங்கஞ்செடி

முதையல் என்பது கடுகு

முப்புரமெரிந்தோன் என்பது பங்கம்பாளை

முரிமுரி என்பது வெள்வேல்; எட்டி

முருங்கு என்பது முருக்கன் மரம்

முருந்து என்பது கொழுந்து: துளிர்

முருவி என்பது இருவி

முல்லை என்பது காட்டுமல்லி: உச்சிமல்லி: கஞ்சா

முலவை என்பது நாய்

முளட்டின் என்பது மிளகு: கமுகை

முளரி என்பது தாமரை

முளை என்பது பூங்கல்லு

முறுவல் என்பது சிரிப்பு

முனிப்பூண்டு என்பது அகத்தி

## மூ

மூய்வேல் என்பது முளட்டின்

மூர்க்கம் என்பது சரீரம்

மூர்த்தம் என்பது தலை

மூர்த்தி என்ப தலை

மூரல் என்பது உள்சதை

மூரூவம் என்பது பெருங்குரும்பை

மூலகந்தம் என்பது இருவேலி

மூலகம் என்பது புழுக்கொல்லி

மூலம் என்பது எருமை

மூலவல்லி என்பது இலைக்கொடி

மூவேல் என்பது வெள்வேல், கருவேல், குடிவேல்

மூழட்டின் என்பது மிளகு

## மெ

மெச்சிரங்கு என்பது ஆடுதின்னாப்பாலை

மெய் என்பது சரீரம்

மெய்நீர் என்பது மூத்திரம்

## மே

மேகவாய் என்பது தயிர்

மேகநாகம் என்பது சிறுகீரை

மேகார் இந்தம் என்பது மயிலடி

மேடம் என்பது ஆடு

மேதி என்பது எருமை

மேதை என்பது இறைச்சி

மேளகம் என்பது கஞ்சிக்காடி

## மை

மை என்பது ஆடு; கறுப்பு; கரிமை

மைச்சை என்பது சுக்கிலரத்தம்

மைமா என்பது பன்றி

மைமி என்பது மிளகுக்கொடி: சேவியம்

மையம் என்பது நடு

## மொ

மொச்சம் என்பது வாழை

மொசமை என்பது அவரை

மொய் என்பது அத்தி

மொய்ப்பு என்பது தேன்

## மோ

மோட்டில் என்பது குயின்

மோடம் என்பது இலவம்பிசின்

மோத்தை என்பது ஆடு

மோதகம் என்பது அசமதம்

மோரடம் என்பது வெள்ளி

மோவாய் என்பது தாவாங்கட்டை

மோளல் என்பது பன்றி

மோளனை என்பது காட்டுமல்லி

மோனம் என்பது மோட்சம்

மோனிகம் என்பது பெருச்சாளி

மோனை என்பது காடிக்கஞ்சி

## ய

யகுவல்லி என்பது பல்காரம்

யங்கோலம் என்பது அழிஞ்சில்

யசுவபரி என்பது அலரி

யஞ்சலி என்பது வறட்சுண்டி

யடிமை என்பது சிகர்

யணிமணி என்பது குத்தான் குதும்பை

யத்தவு என்பது அத்தி

யதன் என்பது ஆத்துமா

யதிமாய் என்பது வெள்வேல்

யந்திரகோரம் என்பது நெல்லி

யபமார்க்கம் என்பது நாயுருவி

யமர்க்கேளம் என்பது கடுக்காய்ப்பூ

யளிஞ்சி என்பது வயிரவன்

யனசும்பு என்பது புல்லுருவி

யனி என்பது வண்டு

## யா

யாக்கை என்பது சரீரம்

யாபதம் என்பது வாது

யாரம் என்பது தோன்றப்பூண்டு

யாரியாத்தி என்பது யாவலம்: ஆகாயம்

## யி

யிச்சிபம் என்பது சவரிலோத்திரம்

யிந்திரியவல்லி என்பது முடக்கொற்றான்

யினியான் என்பது தேசிப்பழம்.

## யீ

யீசுரமூலி என்பது பெருமருந்து

யீந்தல் என்பது கொடுத்தது

யீறில் என்பதுஇறப்பில்

## யூ

யூகம் என்பது கருங்குரங்கு

யூதிகம் என்பது முல்லை

யூமம் என்பது காட்டுமல்லி

## யெ

யெருமைத்தக்காளி என்பது பெருந்தக்காளி

யெவானி என்பது ஓமம்.

## யே

யேகரம் என்பது முத்துமருந்து

யேவானி என்பது ஓமம்

## யோ

யோனி என்பது ஈஸ்வரிலிங்கம்

## ர

ரசம் என்பது இரதம்: சூதம்:தபாலம்: தேன்

ரஸ்தாளி என்பது வாழைப்பழம்

## ரா

ராசம் என்பது முள்ளிப்பால்

ராசவிருட்சம் என்பது கொன்றை

## ரு

ருத்திரம் என்பது வீரியம்: தந்தம்: பூண்டு: சிவனார் வேம்பு

## ரெ

ரெத்த குங்குமம் என்பது மஞ்சட்டி

ரெத்தப்பினப்பிகம் என்பது மூக்கிரட்டை

ரெசகருணா என்பது கடுகு

ரெசனம் என்பது உள்ளி

ரெசனாக்கினா என்பது வெண்கடுகு

ரெசேந்திரம் என்பது இரதம்

ரெசோபனம் என்பது நறும்பிசின்

## ரே

ரேதம் என்பது திமிசு

ரேபம் என்பது மிளகு

## ரோ

ரோகணி என்பது கடுகுரோகணி

ரோகம் என்பது வியாதி

ரோத்தை என்பது அகந்தையம்

## ல

லகுசன் என்பது எலுமிச்சன்

லங்கம் என்பது ஸ்திரி புருஷன் புஞ்சகம்

லசம் என்பது ஊத்தை

லசுணம் என்பது உள்ளி

லம்பம் என்பது லம்புரிக்கொடி

லவணம் என்பது உப்பு

லனை என்பது அரசு

## லெ

லெட்சுமணம் என்பது நறுந்தாளி

லெந்து என்பது கல்லுப்பு

லெம்புயம் என்பது நிலக்கடம்பு

லெமாகம் என்பது கைப்பு

## லே

லேபம் என்பது தக்கோலம்

## லோ

லோகசூரணம் என்பது அரப்பொடி

லோகாந்தம் என்பது காந்தமாகும்

லோகுதம் என்பது சந்தனம்

## வ

வகத்திரம் என்பது வாகை

வகலியம் என்பது மரம்

வகாதம் என்பது வெம்புனல்

வகிரா என்பது மகிடமரம்

வங்கணம் என்பது செங்கத்தாரி

வங்குசகோசனம் என்பது குங்குமப்பூ

வங்குசம் என்பது கூகைநீரு

வங்குளம் என்பது காற்று

வச்சயம் என்பது கலைமான்

வச்சரி என்பது வேம்பு

வச்சிரகெந்தம் என்பது அரிதாரம்

வச்சிரதிலதம் என்பது முத்தக்காசு

வச்சிரநிணம் என்பது கிரிவேம்பு

வச்சிரம் என்பது சதுரக்கள்ளி

வச்சிரவல்லி என்பது பிரண்டை

வச்சிர விருட்சம் என்பது புல்லுருவி

வச்சை என்பது மலட்டுப் பசு

வசகம் என்பது கொடுவேலி

வசா என்பது வசம்பு

வசிகரம் என்பது செருந்தி

வசு என்பது நெருப்பு

வசுகரை என்பது புளி

வசுந்தனி என்பது புத்தி

வஞ்சுளம் என்பது வஞ்சிக்கொடி

வட்டத்திருப்பி என்பது பொன்முசுட்டை

வட்டிகை என்பது நல்வகைச் சாந்து

வடம்புலி என்பது ஆல்

வடவை என்பது எருமை

வடு என்பது செம்பு

வண்டமை என்பது கருகுசங்கு

வத்தகம் என்பது வெட்பாலை

வத்திரம் என்பது முகம்

வதற்றகு என்பது கறிமுள்ளி

வது என்பது வக்கில்

வய்யகம் என்பது கடுக்காய்

வயம் என்பது கிராம்பு

வயமது என்பது சீந்தில்

வயமம் என்பது புத்தி

வயேகடம் என்பது மரமஞ்சள்

வல்லி என்பது கொடிமருந்து

வலறி என்பது புன்துடங்கி

வறளி என்பது பாலையாகும்

வறிக்கடை என்பது நெல்லு

வறிகோ என்பது இலந்தை

வறிப்பி என்பது சதகுப்பி

வறியறிஎன்பது தண்ணீர்மீட்டான்

வறிவி என்பது கட்டிகை

## வா

வார்க்கியம் என்பது கொட்டைக்கிழங்கு

வாரகம் என்பது நிலப்பனை

வாரடி என்பது பலகரை

வாரயம் என்பது பிரமி

வாரை என்பது மூங்கில்

வானறியம் என்பது பேராமுட்டி

**நூல் முற்றும்**

# தொடர்களாக வந்த சொல்லும் பொருளும் இவண் சொல்பொருள் அகராதியாகத் தரப்படுகிறது

## அ

| | | |
|---|---|---|
| அக்கம் | - | தான்றிக்காய் |
| அக்கரம் | - | கறுப்புட்ட மாமரம் |
| அக்காந்தான் | - | தான்றிக்காய் |
| அக்காளம் | - | உள்வயிரமுள்ளமரம் |
| அக்கிடம் | - | வசம்பு |
| அக்கு | - | பலகரை |
| அக்குவா | - | பல்காரம் |
| அகத்தி | - | உபாலமுலைப்பால் |
| அகத்தியன் | - | தமிழ்க்குரியோன் |
| அகம் | - | கந்தகம் |
| அகாகலம் | - | அகில் |
| அகிமார் | - | வெள்வேல் |
| அங்கணம் | - | வெங்காரம் |
| அங்காரம் | - | மூல் |
| அங்காரவல்லன் | - | குருஞ்சில் |
| அங்கிடசபாதி | - | சிறுபுள்ளடி |
| அங்கினி | - | கற்றாழை |
| அங்குசபிசாரி | - | கொள்ளு |
| அங்குசரோசன் | - | கூகைநீரு |
| அங்குன் | - | சவரிலோத்திரம் |
| அங்கோலம் | - | அழிஞ்சி |
| அச்சகம் | - | வெங்காயம் |
| அச்சம் | - | அகத்தி; இகறிப்புல்லு |
| அச்சமரம் | - | நான்முகப்பல் |
| அசமதாகம் | - | ஓமம்; |
| அசமம் | - | அசமதாகம்;நீர்முள்ளி |
| அசுவகம் | - | பசு |
| அசுவகந்தி | - | அமுக்குரா; குதிரை மூத்திரம் |

| | | |
|---|---|---|
| அசுவபரி | - | அலரி |
| அகவம் | - | அமுக்குரா; குதிரை |
| அசுவாதம் | - | அரசம் |
| அசுணம் | - | வெள்ளைப்பூண்டு |
| அசோதம் | - | சவரிலோத்திரம் |
| அசோனம் | - | வாழை |
| அஞ்சலி | - | வறட்சுண்டி |
| அட்டகம் | - | வசம்பு |
| அட்டதாய் | - | சரமூலம்; கொடுவேலி; எருக்கு; நெருஞ்சி; மாவிலிங்கம்; சங்கங்குப்பி; தழுதாழை; குமிள்; பாதிரியிலை |
| அட்டர் | - | சாதிக்காய் |
| அட்டவர் | - | பெருங்காயம்; கருஞ்சீரகம்; மிளகு; ஓமம் |
| அட்டி | - | இலுப்பை |
| அட்டிமதுரம் | - | அதிமதுரம் |
| அட்டிமை | - | சீரகம் |
| அட்டியோகம் | - | அரப்பொடி |
| அடவிக்கசெல்வம் | - | கத்தூரிமஞ்சள் |
| அடவிக்கோல் | - | கோரோசனம் |
| அடவிகம் | - | சாம்பல் |
| அண்டம் | - | கோழிமுட்டை |
| அணிச்சை | - | நாகமல்லி |
| அத்தடம் | - | அதிவிடையம்; பொன் |
| அத்தி | - | எலும்பு |
| அத்திகண்ணி | - | கரிசலாங்கண்ணி |
| அத்திசம் | - | நீர்முள்ளி |
| அத்திநெய் | - | அதவிப்பிசின் |
| அத்திமானம் | - | ஆமணக்கு |
| அத்தியாகிமை | - | கருஞ்சீரகம் |
| அத்திரம் | - | நாக்கில் |
| அத்திரா | - | அரசு |

| | | |
|---|---|---|
| அத்துகம் | - | ஆமணக்கு |
| அத்துமானி | - | அர்ச்சுனன் |
| அத்துவாகாயம் | - | கருஞ்சீரகம் |
| அதகம் | - | முத்து; முருந்து |
| அதர் | - | அத்தி |
| அதரம் | - | மஞ்சள் |
| அதவு | - | அத்தி |
| அதிக்கோய் | - | அழிஞ்சியிலை |
| அதிகோலம் | - | அழிஞ்சி |
| அதிதாரம் | - | இலந்தை |
| அதிபதிசங்கு | - | வாலுளுவை |
| அதிபதிஞ்சி | - | கொடிவேலி |
| அதிமதுரம் | - | குண்டுமணிவேர் |
| அதிவிடம் | - | அதிவிடையம் |
| அந்தகாரம் | - | நெல்லி |
| அந்திரலசுணம் | - | கொட்டைப்பாக்கு |
| அப்பட்டர் | - | வட்டத்திருப்பி |
| அம்படம் | - | புழுக்கொல்லி |
| அம்புயம் | - | தாமரை |
| அம்புவாகினி | - | பாதிரி |
| அம்ம | - | தண்ணீர் |
| அமர்குணா | - | கடுக்காய்ப்பூ |
| அமரி | - | மூத்திரம் |
| அமலகம் | - | நெல்லிக்காய் |
| அமுகாரி | - | பூனைக்காலி |
| அமுதகாரன் | - | வெள்வேம்பு |
| அமுதம் | - | கடுக்காய்ப்பால் |
| அமுதவல்லி | - | சீந்தில் |
| அமுது | - | பால் |
| அய்யம் | - | கடுகு |
| அயிரகம் | - | முனக்குரான் |
| அயோமலம் | - | கிடம் |
| அர்க்கம் | - | சுக்கு |

| | | |
|---|---|---|
| அரசாணம் | - | அரசுமுத்தான் |
| அரத்தை | - | தூம்புருஷ்டம் |
| அரதனம் | - | மணி |
| அரந்தம் | - | செங்கழுநீர்; தாமரை; கடுக்காய் |
| அரம்பை | - | வாழை |
| அரல் | - | சேற்றுமம் |
| அருட்டி | - | மிளகு |
| அருட்டேன் | - | மிளகு |
| அரேணுகம் | - | வால்மிளகு |
| அரைமுறி | - | பச்சிலை |
| அவத்திக்கண்ணி | - | மெருகு |
| அவயவெண் | - | கடுகு |
| அவிஷதம் | - | மருந்து |
| அளகப்பேதம் | - | அதிவிடையம் |
| அறிக்கி | - | கடுக்காய் |
| அறிசனம் | - | மஞ்சள் |
| அறிசா | - | பெருவருமீன் |
| அறிதாளம் | - | அரிதாரம் |
| அறுசுவை | - | மங்கிஷபேதி; சாத்திரபேதி; பரிசினபேதி; தூக்குபேதி; ஆபேதி |

## ஆ

| | | |
|---|---|---|
| ஆகாசத்தூள் | - | ஒட்டடை |
| ஆகாயத்தாமரை | - | கொட்டைப்பாசி |
| ஆகாரம் | - | சோறுசாப்பிடுதல் |
| ஆசியம் | - | கருஞ்சீரகம் |
| ஆசையம் | - | பொன்னாகம் |
| ஆட்சை | - | துவரை |
| ஆண்டலை | - | பூவில்லாமரம் |
| ஆத்தின் | - | புருவமத்தியம் |
| ஆத்துமுள்ளி | - | கண்டங்கத்திரி |

| | | |
|---|---|---|
| ஆத்தூர்முத்தான் | - | பூனைக்காலி |
| ஆதம்பேத்தி | - | செம்புநெருஞ்சி |
| ஆதளை | - | காட்டாமணக்கு |
| ஆம்பலா | - | புளியாரை |
| ஆம்பால் | - | அல்லிச்செடிக்கள்ளு |
| ஆம்புவம் | - | சுரை |
| ஆமரிக்கு | - | நெல்லி |
| ஆமல் | - | விஷமூங்கில் |
| ஆமலகம் | - | நெல்லிக்காய் |
| ஆமாவம் | - | சுரை |
| ஆர் | - | ஆத்தி |
| ஆர்கோதம் | - | கொன்றை |
| ஆர்வரியம் | - | அரசு |
| ஆரம் | - | கோடசப்பாலைமுத்து |
| ஆரே | - | நாவிதழ்க்குறை |
| ஆலக்காலம் | - | விஷம் |
| ஆலுகம் | - | வில்வம் |
| ஆவம் | - | குங்குமம் |
| ஆவாகை | - | நிலவாகை |
| ஆவிப்பதம் | - | பேராமுட்டி |
| ஆளகம் | - | சுரை |
| ஆனைக்கண்ணி | - | அத்தித்துளிர் |

## இ

| | | |
|---|---|---|
| இகுர்மூலி | - | பெருமருந்து |
| இச்சி | - | அரசு |
| இடக்கும் | - | சங்குமுட்டி |
| இதளை | - | தொப்புள் |
| இந்திரகந்தம் | - | நன்னாரி |
| இந்திரகோலம் | - | தாம்பூலப்பூச்சி; நாக்குப்பூச்சி |
| இந்திரவல்லிமுகில் | - | கொத்தான்துளிர் |
| இந்து | - | சந்திரன் |
| இந்துளபம் | - | நெல்லி |

| | | |
|---|---|---|
| இபம் | - | யானைக்கொம்பு |
| இபாந்து | - | கல்லுப்பு |
| இயல்பூதி | - | இண்டிலை |
| இயற்பு | - | குணம் |
| இயாகம் | - | கொன்னை |
| இயைமே | - | கொன்னை |
| இரசிதல் | - | வெள்ளி |
| இரத்தம் | - | ததி |
| இரத்தி | - | இலந்தை |
| இரல் | - | பதுக்கை |
| இரலி | - | இச்சிச்செடி |
| இரலை | - | புல்வாய் |
| இரவணின்பம் | - | சிவனார் வேம்பு |
| இராசியம் | - | தாமரைப்பூ |
| இராடம் | - | வெங்காயம் |
| இரால் | - | தேன் |
| இரியல் | - | லவங்கப்பட்டை |
| இருசயுகமை | - | பால் |
| இருசிறியார் | - | கருஞ்சீரகம்; நற்சீரகம் |
| இருஞ்சில் | - | மகிழம் |
| இரும்பு | - | தாமரை |
| இரும்புகொல்லி | - | சிவனார்வேம்பு |
| இருவல் | - | வெள்ளீயம் |
| இருவேலி | - | வெட்டி |
| இவார்வடி | - | ஏலம் |
| இன்பூறல் | - | சாயவேர் |

## ஈ

| | | |
|---|---|---|
| ஈகை | - | கொடுக்கல்; பொன் |
| ஈங்கம் | - | சந்தனம் |
| ஈசன்தேவி | - | கௌரி |
| ஈசுரமூலி | - | பெருமரம்; பெருமருந்து |
| ஈசுரன்விந்து | - | இரசம் |

| | | |
|---|---|---|
| ஈமரம் | - | குங்குமப்பூ |
| ஈயை | - | சஞ்சீவி |
| ஈர் | - | கரும்பு |
| ஈர்ப்பா | - | அசனி |
| ஈரணம் | - | கள்ளி |
| ஈவது | - | கொடுக்கிறது |
| ஈன்றவள் | - | பெற்றவள் |
| ஈனத்தார் | - | கொன்னை |

## உ

| | | |
|---|---|---|
| உக்கம் | - | ஆசை |
| உக்கிரகந்தம் | - | வசம்பு |
| உகமல்லி | - | நாகமல்லி |
| உகிழந்துளிர் | - | அரம்பு |
| உகின் | - | புளியமரம் |
| உங்காரணை | - | அவுரி |
| உடல் | - | பொன் |
| உடுப்பாதகம் | - | அணை |
| உண்டுகம் | - | பெருவாகை |
| உண்டை | - | காக்காய் |
| உத்தகு | - | புங்கு |
| உத்தம்பரி | - | கொத்தமல்லி |
| உத்தமதாளி | - | வேலிப்பருத்தி |
| உத்தரி | - | பருத்தி |
| உத்தாபலம் | - | சங்கன்செடி |
| உத்தி | - | அபின்மருந்து |
| உதகம் | - | தண்ணீர் |
| உதரம் | - | வயிறு |
| உதருவி | - | மரமஞ்சள் |
| உதாம்பரம் | - | செம்பு |
| உதிரிமுறிப்பான் | - | விஷ்ணுகிராந்தி |
| உந்தி | - | தொப்புள் |
| உப்புல் | - | செங்கணைவலி |

| | | |
|---|---|---|
| உபகுல்லம் | - | சுக்கு |
| உபகுவம் | - | திருப்பாலை |
| உபலோகத்திரம் | - | வெள்ளி |
| உபவம் | - | சீந்தி |
| உமர் | - | குண்டுமணி |
| உமலதம் | - | அரிதாரம் |
| உமாகூடம் | - | புல் |
| உரு | - | அமடம் |
| உருத்திரம் | - | மஞ்சள் |
| உருவாரம் | - | வெள்ளரி |
| உருளரிசி | - | கொத்தமல்லி |
| உல்லரி | - | துளிர் |
| உலாங்கம் | - | மனோசிலை |
| உலாங்குலி | - | பெருஞ்சீரகம் |
| உலிமறி | - | நாயுருவி |
| உலுவம் | - | வெங்காயம் |
| உள்ளி | - | வெங்காயம் |
| உறல்பலம் | - | செங்கண்ணி |
| உறைகல் | - | வெங்கலம் |
| உன்மதகி | - | குறிஞ்சான் |

## ஊ

| | | |
|---|---|---|
| ஊதிகை | - | முல்லை |
| ஊமிளை | - | சிறுபூளை |
| ஊமை | - | திரி |
| ஊர்புகம் | - | ஆமணக்கு |
| ஊரில்அழகர் | - | எருக்கிலை |
| ஊருடன் மூலி | - | முருங்கை |
| ஊருவார்ப்பன் | - | வெள்ளரிக்காய் |
| ஊழியக்காரன் | - | இரசம் |

## எ

| | | |
|---|---|---|
| எகுண்டு | - | குண்டுமணி |
| எச்சம் | - | கழிச்சல் |
| எட்கம் | - | தென்னைமரம் |
| எட்டி | - | விஷமுட்டி |
| எட்டிகம் | - | சீந்தில் |
| எபத்திரம் | - | மலையத்தி |
| எமநாசம் | - | ஓமம் |
| எருந்தி | - | எருமட்டி |
| எருவை | - | கழுதை |
| எலிப்பாலை | - | காட்டாமணக்கு |

## ஏ

| | | |
|---|---|---|
| ஏகவாசகம் | - | அகம் |
| ஏகவாவல்லி | - | பால் |
| ஏதினை | - | புளியமரம் |
| ஏமனாகம் | - | ஊமத்தை |
| ஏரடம் | - | இடி |
| ஏரண்டம் | - | ஆமணக்கு |
| ஏரணம் | - | ஆமணக்கு |
| ஏலி | - | கள்; சங்கஞ்செடி |
| ஏனத்துப்பால் | - | பன்றிப்பால் |
| ஏனம் | - | தினையரிசி;எள்ளு |

## ஐ

| | | |
|---|---|---|
| ஐசிலம் | - | சிறுநாகப்பூ |
| ஐயம் | - | சேற்றுமம்; பிச்சையெடுத்தல் |
| ஐவந்தார் | - | மனை |

## ஒ

| | | |
|---|---|---|
| ஒங்கலம் | - | விஷமூங்கில் |

| | | |
|---|---|---|
| ஒச்சை | - | எச்சை |
| ஒண்ணி | - | பொன் |
| ஒத்திமம் | - | விஷமூங்கில்; புளியமரம் |
| ஒருவை | - | ஆடு |

## ஓ

| | | |
|---|---|---|
| ஓசை | - | வாழை |
| ஓமம் | - | அசமதாகம் |
| ஓமை | - | மாமரம் |
| ஓலம் | - | பிரம்பு |

## ஔ

| | | |
|---|---|---|
| ஔவை | - | அவைநஞ்சு |

## க

| | | |
|---|---|---|
| கக்குடு | - | மஞ்சள் |
| கக்கோரம் | - | மாமரம் |
| ககமாதம் | - | மணத்தக்காளி |
| ககனம் | - | துத்தநாகம் |
| கங்குரம் | - | தினை |
| கசராகம் | - | கொன்றை |
| கசாபர் | - | மஞ்சள் |
| கசைதசை | - | அபினி |
| கஞ்சம் | - | தாமரை |
| கஞ்சாம் | - | செம்பு |
| கஞ்சான் | - | கஞ்சாங்கோரை |
| கஞ்சுரம் | - | முருக்கு |
| கட்சாடபிகம் | - | பல் |
| கடம்பம் | - | வாலுளுவை |
| கடலி | - | மூக்கிரட்டை |
| கடவுளம் | - | தேவதாரம் |
| கடிகண்டு | - | பூனைக்காலி |

| | | |
|---|---|---|
| கடிச்சவாய் துடைச்சான் | - | எருக்கு |
| கடிப்பகை | - | கடுகு |
| கடில் | - | மூக்கிரட்டை |
| கடு | - | கடுக்காய் நஞ்சு |
| கடுகரம் | - | கடுகுரோகணி |
| கண்டங்கனம் | - | திப்பிலி |
| கண்டங்காலி | - | கண்டங்கத்திரி |
| கண்டு | - | கற்கண்டு |
| கணங்கம் | - | சுண்ணாம்பு |
| கணா | - | திப்பலி |
| கத்தரிநாயகன் | - | காட்டுச்சீரகம் |
| கந்தம் | - | சாரணை |
| கயமலாகி | - | வசம்பு |
| கயிரவம் | - | வெள்ளாம்பல் |
| காரமை | - | களாச்செடி |
| கரவதம் | - | காகம் |
| கரவீரம் | - | அலரி |
| கரிபோளம் | - | நறும்பிசின் |
| கரியமால் | - | துளசி |
| கருங்கஞ்சன் | - | வெண்கலம் |
| கருங்கோலம் | - | இரும்பு |
| கருஞ்சோனம் | - | அகிற்கட்டை |
| கரும்பை | - | நாயுருவி; காடி |
| கரும்பொன் | - | இரும்பு |
| கருவிரி | - | கம்பு |
| கருவை | - | வரகுவைக்கோல் |
| கல்லாரம் | - | மஞ்சள் |
| கல்லுருவி | - | புல்லுருவி |
| கலவகம் | - | காக்காய் |
| கலாயம் | - | தயிர் |
| கலிகம் | - | வாலுளுவை |
| கலித்துருமம் | - | தானிக்காய் |
| கலியகம் | - | வேப்பிலையரிசி |
| கலியாணம் | - | பொன் |

| | | |
|---|---|---|
| கலினை | - | கொள்ளு |
| கலுளி | - | காட்டெருமை |
| கலுனன் | - | கருடன் |
| கவடி | - | பலகறை |
| கவடு | - | கொம்பு |
| கவலை | - | தினையரிசி |
| கவாடம் | - | வெட்பாலை |
| கவி | - | மந்தி |
| கவிரம் | - | அலரி |
| கவிரோமம் | - | பூனைக்காலி |
| கவிளம் | - | மோர் |
| கவினி | - | திருப்பாலை |
| கவுசிகம் | - | குக்கில் |
| கவுதி | - | கொன்னை |
| கவை | - | எள்ளு |
| கழற்காய் | - | கழற்சி |
| கழாயம் | - | சிறுகீரை |
| கழாரம் | - | பாக்குக்கமுது |
| கழுதை | - | நஞ்சறுப்பான் |
| கழுனை | - | மாதுளை |
| கள்ள | - | சேற்றுமம் |
| களகசு | - | வேதம்; அதிவிடையம் |
| களகபுதம் | - | வெள்ளி |
| களகம் | - | எலி |
| களங்கி | - | கழற்சி |
| களப்பன் | - | பெருங்குயில் |
| களவன் | - | தண்டு |
| கற்கடகசிங்கி | - | கடுக்காய்ப்பூ |
| கற்கண்டம் | - | அகில் |
| கற்பரம் | - | துளசி |
| கறிமுள்ளி | - | கண்டங்கத்திரி |
| கறிவேம்பு | - | கறிவேப்பிலை |
| கன்றுரம் | - | கற்பூரம் |
| கன்னம்பல் | - | தகரம் |

| | | |
|---|---|---|
| கன்னல் | - | கரும்பு |
| கன்னல்கட்டி | - | கற்கண்டு |
| கன்னி | - | கற்றாழை |
| கனகம் | - | பொன் |
| கனப்பிரகம் | - | அரிதாரம் |
| கனம் | - | களர் |
| கனரமம் | - | கொன்றைக்கிழங்கு |

## கா

| | | |
|---|---|---|
| காக்களி | - | தேள்கொடுக்கு |
| காக்கிரட்டை | - | கருப்புக்கச்சி |
| காக்கை | - | இரசம்;சாயம் |
| காகம் | - | கிறி |
| காகா | - | நாணல் |
| காகிரத்தம் | - | வறட்சுண்டி |
| காகோடி | - | காஞ்சோறி |
| காகோலி | - | கருஞ்சீரகம் |
| காசரை | - | கஸ்தூரி |
| காசி | - | சீரகம் |
| காசிரத்தம் | - | வறட்சுண்டி |
| காஞ்சனம் | - | புங்கு |
| காஞ்சனி | - | மஞ்சள் |
| காஞ்சிரம் | - | கருஞ்சீரகம் |
| காஞ்சீரகம் | - | காஞ்சோறி |
| காட்டணம் | - | பெருங்குமிள் |
| காட்டுத்துவரை | - | இரும்பிலி |
| காட்டுவெள்ளரி | - | பேய்த்தும்மட்டிக்காய் |
| காட்டேரி | - | கள்ளி |
| காண்டகம் | - | நிலவேம்பு |
| காணம் | - | கொள்ளு |
| காத்திரம் | - | பாம்பு |
| காத்தோட்டி | - | ஆதொண்டை |
| காந்தளம் | - | கலப்பைக்கிழங்கு |
| காந்தனம் | - | நாய்வேளை |

| | | |
|---|---|---|
| காப்பு | - | திருநீறு |
| காபிரம் | - | சாம்பிராணி |
| காம்போதி | - | குண்டுமணி |
| காமரம் | - | அகில் |
| காமலம் | - | கழுதைலத்தி |
| காயத்திரி | - | வெங்காயம் |
| காயாகூடகம் | - | நிழலுலத்தல் |
| கார்பாசம் | - | பருத்தி |
| கார்வல்லி | - | பாகம் |
| காரணாம் | - | எருமை |
| காரி | - | அவரை |
| காரிரத்தம் | - | ஆடுதின்னாப்பாலை |
| காருணி | - | வானம்பாடி |
| காலப்பூதம் | - | கோழி |
| காலோமம் | - | அகில் |
| காவஉசில் | - | வாழை |
| காவகா | - | சேங்கொட்டை |
| காவளை | - | காட்டுமல்லிகை |
| காவி | - | கருங்குவளை |
| காவிரம் | - | அலரி |
| காவிளை | - | கொளிஞ்சி |
| காளகண்டம் | - | குடில் |
| காளகம் | - | மருக்காரை |
| காளகன் | - | கழுதை |
| காளம் | - | எட்டி |
| கானக்குறத்தி | - | முலைப்பால் |
| கானக்குறி | - | குதிரை; மாமரம் |
| கானகம் | - | பொன் |
| கானமுயல் | - | காட்டுமல்லிகை |
| கானவல்லி | - | குரங்கு |
| கானிகம் | - | மணத்தக்காளி |
| கானித்தம் | - | ஏலம் |
| கானியம் | - | கக்கரிக்காய் |
| கானுசாரி | - | நன்னாறிவேர் |

## கி

| | | |
|---|---|---|
| கிகிணி | - | கருவிளங்காய் |
| கிஞ்சி | - | வேம்பு |
| கிஞ்சுகம் | - | முருக்கு |
| கிட்டியம் | - | தீகிபம் |
| கிட்டிரம் | - | நெருஞ்சி |
| கிட்டிணம் | - | திரிபாலை |
| கிந்திரிகம் | - | திப்பிலிமூலம் |
| கிரிளசன் | - | இருசீரகம் |
| கிருமி | - | புழு |
| கிருமிசத்துரு | - | பூவரசம்விரை |
| கிளவறி | - | தண்ணீர்விட்டான் |
| கிளை | - | வாலுளுவை |
| கிறட்டி | - | பிரண்டை |
| கிறத்தி | - | நிலவேம்பு |
| கிறமுகம் | - | கமுகு |
| கிறிச்சிறிடம் | - | சாதிக்காய் |
| கிறிடம் | - | உத்தாமணி |
| கிறிதம் | - | நெய் |
| கிறிதவம் | - | அகில் |
| கிறிமல்லி | - | கடசப்பாலை |
| கிறிமிக்கினி | - | வாலுளுவை |
| கிறிவிளவல்லி | - | சிறுநன்னாரி |
| கிறிளசன் வல்லி | - | சிறுநன்னாரி |
| கிறுசன் | - | மஞ்சள் |

## கீ

| | | |
|---|---|---|
| கீசகன் | - | மூங்கில் குறங்கு |
| கீடம் | - | புழு |
| கீடமாறி | - | சிறுபுள்ளடி |
| கீதம் | - | மூங்கில் |

# கு

| | | |
|---|---|---|
| குக்கில் | - | மைகுடகி |
| குக்குறம் | - | கோடசாலை |
| குகு | - | களம் |
| குகுலா | - | கடுகுரோகணி |
| குகை | - | ஆந்தை |
| குங்குமப்பூ | - | சீமைக்குங்குமம் |
| குங்குரது | - | குங்கிலியம் |
| குச்சம் | - | குண்டுமணி |
| குசடம் | - | வெட்பாலை அரிசி |
| குசத்தின் பாதி | - | சிறுபுள்ளடி |
| குசம் | - | தொப்புள் |
| குசேச்சம் | - | தாமரை |
| குஞ்சரம் | - | அத்தி |
| குஞ்சரன் | - | அரசு |
